# நம் வழி வேளாண்மை

பருவம் 26 ஏப்ரல் – ஜூன் 2016 இதழ் 1



அடித்தள கண்டுபிடிப்பாளர்கள் கூட்டம் – புளியங்குடி – 7.8.2016

## இயற்கை வழி விவசாயிகள், மூலிகை வைத்தியர்கள் மற்றும் அடித்தள கண்டுபிடிப்பாளர்களின் குரலோசை

# நம்வழி வேளாண்மை

பருவம் 26 ஏப்ரல் – ஜூன் 2016 இதழ் 1

ஆசிரியர்
**பெ. விவேகானந்தன்**

### நம் வழி வேளாண்மை தத்துவம்

தேனீக்கள் மலரை நாடிச் செல்கின்றன. மலருக்கு மலர் தாவி தேனை எடுக்கின்றன. தேனை எடுப்பதால் மலர் குறைபடுவதில்லை. மாறாக மலர் கருவுற்று காயாக, கனியாக துணை செய்கின்றன. தேனீக்களின் இந்த சேவையினால் மலரும் பயன் பெறுகின்றது. தனக்கும் பிறருக்கும் பயன்படும் தேனையும் அள்ளி சேகரிக்கின்றது. இந்த சேவை தத்துவத்தை பின்பற்றி நம்வழி வேளாண்மை ஒரு சிலரிடம் உள்ள உத்திகளையும் மற்றும் ஒரு பகுதியில் உள்ள பாரம்பரிய அறிவையும் எடுத்து வெளிக்கொணர்ந்து மற்றவர்களுக்கும் பிற பகுதிகளுக்கும் அறிமுகப்படுத்தி மேலும் உய்ய வழி வகுக்கின்றது.

**நம்வழி வேளாண்மை குழுமம்**
**பிற மொழி இதழ்கள்**

ஆங்கிலம் – தேனீ (Honey Bee)
குஜராத்தி – லோக் சர்வானி
ஹிந்தி – சூஜ் புஜ் ஆஸ் பாஸ்கி
ஒரியா – அமா அகாபகா
தெலுங்கு – பல்லி ஸ்ருஜானா
கன்னடம் – ஹித்தலகிடா
மலையாளம் – இனிகர்ஷகான்சம்சாரிகட்டே

**நம் வழி வேளாண்மை**
45, டி.பி.எம். நகர்,
விராட்டிபத்து, மதுரை – 625 016.
தொலை பேசி : 0452– 2380082, 2380943.
இமெயில் vivekseva@gmail.com

**ஆங்கில இதழ் முகவரி**

Prof. Anil Gupta,
**Honey Bee,**
Indian Institute of Management,
Vastrapur, Ahmedabad -380 015
email: honeybee@sristi.org
www.nifindia.org ; www.sristi.org

## யாரும் பார்க்காத தனிமை உண்டோ?

முன்பு ஒரு காலத்தில் ஒரு ரிஷி வாழ்ந்து வந்தார். அவரிடம் பல சீடர்கள் சேர்ந்து ஓர் ஆசிரமத்தில் வாழ்ந்து வந்தனர். அவர் வயதில் குறைந்த ஒரு சீடரிடம் மட்டும் அதிக அன்பு செலுத்திவந்தார். இது மற்ற சீடர்களுக்கு பிடிக்காமல் இருந்தது. அனைவரிடமும் பாரபட்சமின்றி நடத்துவது தான் குருவின் செயல்பாடாக இருக்க வேண்டும் என்று நினைத்தனர். ஒரு நாள் குருவிடம் ஏன் ஒரு சீடருக்கு மட்டும் அதிக அன்பை காட்டுகிறீர்கள் என்று கேள்வி எழுப்பினர். இதற்கு குருவானவர் அந்த சீடர்களிடம் அனைவருக்கும் ஒரு பழத்தை கொடுத்து இதை அருந்தி விட்டு வாருங்கள் என்று கூறினார். ஒரே ஒரு நிபந்தனை. யாரும் பழம் அருந்தும் போது இதை யாரும் பார்த்து விடாதவாரு அருந்தி விட்டு வர வேண்டும் என்று கூறினார். அதாவது குரு கொடுத்திருக்கும் பழங்களை தனிமையிலிருந்து யாரும் பார்த்து விடாதவாரு அருந்தி விட்டு வர வேண்டும் என்று கூறினார். இதன்படி ஒவ்வொரு சீடரும் அவரவருக்கு பிடித்த தனிமையான இடத்திற்கு சென்று பழம் அருந்தி விட்டு திரும்பினர். ஆனால் குருவிடம் அதிகமாக நேசிக்கப்பட்ட சீடன் மட்டும் பழத்தை அருந்தாமல் ஆசிரமத்திற்கு திரும்பி வந்தான். தற்பொழுது அனைத்து சிஷ்யர்களையும் தன்முன் அமர செய்தார். அனைவரும் பழம் அருந்தினீர்களா என்று கேட்டார். ஒரு சீடன் தவிர அனைவரும் தனிமையில் பழம் அருந்தியதை கூறினர். பழம் அருந்தாத சீடனிடம் குரு ''ஏன் பழம் அருந்தவில்லை'' என்று வினவினார். அதற்கு பதில் கூறிய சீடன் ''தாங்கள் முன்பு ஒரு முறை இறைவன் இல்லாத இடமே இல்லை'' என்று சொல்ல கேட்டேன். அதனால் தனிமையான இடத்திற்கு சென்றாலும் தான் பழம் அருந்துவதை இறைவன் பார்த்து விடுவான் என்று நினைத்து பழம் அருந்தாமல் திரும்பி விட்டதாக கூறினான். இந்த வார்த்தையை கேட்ட மற்ற சீடர்கள் ஆச்சரியத்தில் வியந்தனர். இதனை கேட்ட குரு சீடனின் செயலை மெச்சினார். இந்த நிகழ்ச்சியின் மூலம் மற்ற சீடர்கள் அனைவரும் எதற்காக குரு அந்த ஒரு சீடனிடம் மட்டும் அதிகமான நம்பிக்கை வைத்த காரணத்தை புரிந்து கொண்டனர்.

நாம் எந்த செயலை (தவறை தனிமையில்) செய்தாலும் பிறரின் கண்ணோட்டத்திலிருந்து தப்பிக்கலாம். பிறரை ஏமாற்றலாம் . ஆனால் இதற்கு சாட்ஷியாக இருக்கும் நம் மனதை ஏமாற்ற முடியாது. அப்படி ஏமாற்றினால் நம்மை நாமே ஏமாற்றி கொள்வது ஆகுமே!.

# வள்ளுவர் வாக்கு பொய்யாகுமா?

சுழன்றும் ஏர் பின்னது உலகம் – அதனால்
உழன்றும் உழவே தலை – என்பது வள்ளுவர் குறள்

ஆனால் இன்று தலையாய தொழில் உழவு அல்ல. சோதனைகளும், பொருள் நஷ்டமும் சமூக அங்கீகாரமும் அற்ற நிலையில் உழவு உள்ளது. ஏன் இந்த நிலை ? எப்படி இதை மாற்றுவது? உழவர்களின் வேதனைகள் பசுமைப் புரட்சியினால் வந்தது. இரசாயன உரங்களும், கொடிய நச்சுத்தன்மை கொண்ட பூச்சிக்கொல்லி, களைக்கொல்லி முதலியன மண் வளத்தை சீர்குலைத்து உணவுப் பொருட்களை விஷமாக்கியது. உணவே விஷமாகிய விபரீதத்தை மக்கள் இன்னும் புரியவில்லை. பசுமைப்புரட்சிக்கு முன் மக்களிடம் இந்த அளவு நோய்கள் இல்லையே. தாய்மார்கள் 5,6 குழந்தைகளைக் கூட வீடுகளில் இயல்பாக எவ்வித மருத்துவச் செலவும் இல்லாமல் பெற்று வளர்த்தனரே, இன்று நிலை என்ன? தாங்க இயலாத கடன் சுமையால் தற்கொலை செய்து கொள்ளும் விவசாயிகள் ஒரு புறம். நாள் முழுவதும் பாடுபட்டு அல்லாடும் மக்களின் அன்றாட உணவு மெல்லக் கொல்லும் நஞ்சாக மாறியது ஒரு புறம். இதை எவ்வளவு காலம் அனுமதிப்பது? இந்தியாவில் சின்ன மாநிலம் சிக்கிம், 12 ஆண்டுகளாக வெற்றிகரமாக இயற்கை விவசாயத்தை செயல்படுத்துகிறது. அங்கு யூரியா விற்பனை செய்தால் ரூ.1லட்சம் அபராதம் 3 ஆண்டு சிறை. தன் மக்கள் மீது கொண்ட அக்கறையால் அம்மாநில அரசு இயற்கை வேளாண்மையை செயல்படுத்துகிறது. கர்நாடகம், கேரளா போன்ற மாநிலங்களும் இது பற்றி சிந்திக்கத் துவங்கியுள்ளன. சீக்கியர்களின் பொற்கோவிலில் இயற்கை முறையில் விளைந்த காய்கறிகளையும் கோதுமையையும் பயன்படுத்த தீர்மானித்துள்ளனர். இன்றுள்ள பல நோய்களுக்கு காரணமே பூச்சிக்கொல்லிகள் தான். இது விவசாயிகளது பிரச்சனை மட்டும் அல்ல. வாங்கிச் சாப்பிடும் மக்களின் பிரச்சனை. காசு கொடுத்து நஞ்சை வாங்கி உண்ண வேண்டுமா? தமிழ்நாட்டில் மதுவினால் பெருத்த பாதிப்புகள் ஏற்பட்ட பின் பொதுமக்கள் மத்தியில் ஏற்பட்டு ஆவேசத்தின் காரணமாக எல்லா கட்சிகளும் மதுவிலக்கை அமுல்படுத்துவதாக கூற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அதே போல் மக்களை நோய்வாய்ப்படுத்தும் இரசாயன வேளாண்மையை மாற்றி நஞ்சில்லாத வேளாண்மை முறை தேவை என்று பொதுமக்கள் ஒன்று கூட வேண்டும். இல்லையானால் வள்ளுவர் வாக்கும் பொய்யாகிப் போகும்.

திரு. கோமதிநாயகம், விவசாய சேவா நிலையம்
புளியங்குடி, திருநெல்வேலி மாவட்டம்

# சொக்கலிங்கத்தின் இயற்கை பண்ணை



நாகப்பட்டிணம் மாவட்டம் கீழ்வேந்தன் வட்டம் நீலப்பாடியில் வசிப்பவர் திரு. சொக்கலிங்கம் (வயது 62). இவர் பி.ஏ., பட்டதாரி ஆவர். இவர் சென்னை புற்றுநோய் மையத்தில் உதவியாளராக மூன்றாண்டு காலம் பணிபுரிந்து பின்பு ஊருக்கு வந்து விவசாயம் செய்ய துவங்கினார். இவர் கிராம நிர்வாக அலுவலராக தேர்வு செய்யப்பட்ட பின்பும் விவசாயத்தில் உள்ள ஆர்வம் காரணமாக அவ்வேலையில் சேராமல் விவசாயத்தை தொடர்ந்தார். இவர் இயற்கை வேளாண்மை விஞ்ஞானி நம்மாழ்வாரின் இயற்கை விவசாய முறைகளை கடைபிடித்தார். இவருக்கு ஒரே ஒரு மகள். இவரது மகளும் இயற்கை விவசாயத்தில் ஆர்வம் உள்ளவர். இவர் இருபது ஆண்டு காலமாக இயற்கை விவசாயத்தை 13 ஏக்கரில் கடைபிடித்து வருகிறார். இவர் இரண்டு தர்பார்கர் பசு மாடு வளர்த்து வருகிறார். இவரது வீட்டில் சாண எரிவாயு பயன்படுத்தி வருகின்றார்.

### இயற்கை வேளாண்மை

இவர் தனது நிலத்திற்கு வருடா வருடம் ஆட்டுக் கிடை அமர்த்துவது வழக்கமாக உள்ளது. மேலும் மூன்று வருடத்திற்கு ஒரு முறை ஒரே மாதத்தில் சணப்பை விதைத்து அதை பூக்கும் தருவாயில் மடக்கி உழுது விடுகிறார். வருடம் வருடம் இவர் தயார் செய்யும் கம்போஸ்ட் ஏக்கருக்கு 50 கிலோ என்ற விகிதத்தில் அத்துடன் நுண்ணுயிர் உரம் ட்ரைகோடெர்மா, விரிடி, சூடோமோனஸ் 5 பாக்கெட்கள் கலந்து போடுகிறார். பின்பு கனஜீவாமிர்தம் ஏக்கருக்கு 50 கிலோ வீதம் தெளித்து விடுகிறார். நடவு செய்த பின்பு ஊறல் போட்ட பனம்பழ மூட்டையை வயல் மடையில் 3 அடி ஆழத்தில் வைத்து விடுகிறார்.

**கம்போஸ்ட் தயாரித்தல்**

சாண எரிவாயு அமைப்பிலிருந்து கிடைக்க கூடிய சாண கரைசல் மற்றும் மாட்டுக் கொட்டகை குப்பை, சருகு, செத்தை, இலைகளைக் கொண்டு இயற்கையாக கம்போஸ்ட் தயார் செய்யப்படுகிறது. இதில் பயிருக்கு தேவையான அங்கக சத்து முழுவதும் கிடைக்கின்றது. இவர் மாடும் கோபர்கேஸ் அமைப்பும் ஓர் உரத் தொழிற்சாலை என்று கூறுகிறார். மேலும் பயிருக்கு தேவையான பேரூட்ட மற்றும் நுண்ணுட்ட சத்துக்கள் அனைத்தும் கோபர்கேஸ் கழிவிலிருந்து கிடைக்கின்றது என்று கூறுகிறார்.

**கனஜீவாமிர்தம் தயாரித்தல்**

சாண எரிவாயு கரைசல் – 10 கிலோ, கோமியம் – 10 லிட்டர், பயறு மாவு – 2 கிலோ, வயல் மண் – 2 கிலோ மேற் கூறியவைகளை நன்றாக கலந்து நிழலில் 10 நாட்கள் காய வைத்து பின்பு ஏக்கருக்கு 50 கிலோ என்ற விகிதத்தில் அடியுரமாகவோ, மேலுரமாகவோ இடுகிறார்.

**பனம் பழம் உர மூட்டை தயாரித்தல்**

பனம் பழத்தை சாக்கில் கட்டி தண்ணீரில் 10 நாட்கள் ஊறல் போட வேண்டும். பின்பு அச்சாக்கு மூட்டைகளை வயலில் தண்ணீர் பாயும் வாய்மடையில் 3 அடி ஆழத்தில் குழி வெட்டி வைத்து விட வேண்டும். இப்படி செய்வதால் பயிருக்கு தேவையான தழைச்சத்து, மாவுச்சத்து மற்றும் நுண்ணூட்டத் சத்துக்கள் கிடைக்கின்றன. இம்முறையால் பயிர் மகசூல் கூடுகிறது. பூச்சி தாக்குதல் கிடையாது. நன்மை செய்யும் பூச்சிகள் அதிகம் உருவாகும். பயிர் ருசியாக இருந்தால் நன்மை தரும் பூச்சிகள் அதிகம் வரும்.

**மகரந்த சேர்க்கை அதிகரிக்க**

புளித்த மோர், சூடோமோனஸ், சாணிப்பால் (தெளிந்த நீர்) சமமாக எடுத்து கலந்து கொள்ள வேண்டும். இக்கலவையிலிருந்து 100 மி.லி என்று ஒரு டேங்கில் ஊற்றி 10 லிட்டர் தண்ணீர் கலந்து பயிருக்கு தெளிக்கலாம். ஓர் ஏக்கருக்கு 10 டேங் தெளிக்க வேண்டும். இதனால் பயிருக்கு மகரந்த சேர்க்கை கூடும். பூ கொட்டாது. பலன் கூடும்.

**எலுமிச்சை முட்டை கரைசல் தயாரித்தல்**

எலுமிச்சைபழ சாறு – 200 மி.லி, முட்டை – 5 ஓட்டுடன் இரண்டையும் கலந்து 10–15 நாள் ஒரு மண் பாத்திரத்தில் வாயை துணியால் கட்டி ஊறல் போட வேண்டும். இதிலிருந்து 50 மி.லி எடுத்து ஒரு டேங்கில் ஊற்றி தண்ணீர் கலந்து பயிருக்கு அடிக்கலாம். இதனால் நெல் மணி கட்டும். மணிகள் கூடும்.

**தர்பார்க்கர் பசுமாடு வாங்குதல்**

2005ம் ஆண்டு சேவா சுனாமி மறுவாழ்வு திட்டத்தின் கீழ் தார்பார்கர் பசு மாடுகள், காளைகள் தரங்கம்பாடி, மாணிக்கம்பங்கு கிராமங்களில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பயணாளிகளுக்கு அவர்களது வாழ்வாதாரத்திற்காக கொடுக்கப்பட்டன. அப்பயணாளிகள் தார்பார்கர் மாடுகளை சரிவர பராமரிக்காததால் அவர்கள் மாடுகளை அடி மாட்டுக்கு விற்க தொடங்கி விட்டனர். இவர் கடந்த 2006 ம் ஆண்டு தற்செயலாக மாணிக்கம் பங்கு சென்றுள்ளார்.அப்போது மாட்டு உரிமையாளர் மாடு சினை பிடிக்க வில்லை என்ற காரணத்தினால் மாடுகளை அடிமாட்டிற்க்கு விற்றார். அதைப் பார்த்து அதிர்ந்து போய் ரூ.6,000/– த்திற்கு விற்ற மாட்டை மாடு ஒன்றுக்கு ரூ.10,000 /– கொடுத்து இரண்டு மாடுகளை வாங்கி வந்தார். மாடுகள் இரண்டையும் இவருடைய இடத்திற்கு கொண்டு வந்து அங்குள்ள ஒரு கால்நடை மருத்துவரிடம் காண்பித்து மாடு சினை பிடிக்கவில்லை என்று வைத்தியம் செய்ய சொல்லியிருக்கிறார். அதற்கு அந்த மாடுகளை பரிசோதித்த டாக்டர் இந்த மாடுகளுக்கு கர்ப்பபையே கிடையாது. இம்மாடுகளை ஏன் வாங்கி வந்தீர்கள் என்று சொல்லி அனுப்பி விட்டாராம்.

**மாடு சினை பிடிக்க வைத்தியம் பார்த்தல்**

பின்பு இவர் மாடுகளுக்கு நல்ல பசுந் தீவனங்கள் கொடுத்ததுடன் தினமும் காலை வெறு வயிற்றில் கோவை இலைகளை 1/4 கிலோ வீதம் தொடர்ந்து 15 நாட்கள் கொடுத்து வந்துள்ளார். பின்பு மாடு முடையடிக்க மாட்டை சினைக்கு போட்டுள்ளார். அதன் பின்பு மாடுகள் சினை பிடித்து விட்டன. இவர் இன்னும் தார்பார்கர் மாடுகளை பராமரித்து வருகிறார். மாடு ஒன்று காலை 6 லிட்டர் மாலை 4 லிட்டர் பால் கறக்கின்றது. இந்த நாட்டு மாடுகள் மூலம் தனது வயலுக்கு தேவையான எரு கிடைக்கின்றது.

இவருக்கு தற்போது வயதாகி விட்டது. இவரும் இவரது மனைவியும் ஊரில் வசித்து வருகின்றனர். இவரது தம்பிகள் வெளியூரில் உள்ளனர். இவரது மகளும் திருமணமாகி வெளியூரில் உள்ளார். இவரது மகள் இவரை நிலங்களை விற்று விட்டு வீட்டில் ஓய்வெடுங்கள் சிரமப்பட வேண்டாம் என்று கூறினாலும் இவ்வளவு வருடம் கஷ்டப்பட்டு பண்படுத்திய வளமான பூமியை விட்டு பிரிய மனமில்லாமல் இயற்கை விவசாயத்தை தொடர்ந்து செய்து வருவதாகக் கூறுகிறார்.

எம். சொக்கலிங்கம் ,3/471, குருமணாங்குடி மெயின் ரோடு,நீலப்பாடி, அத்திப்புலியூர்– 611105,கீழ்வேளூர் தாலுகா, நாகப்பட்டிணம் மாவட்டம்,செல்– 9944044663

## சூரிய சக்தி (சோலார்) அடிபம்பு, சைக்கிள்

திரு. மணிகண்டன் (45) ஐ.டி.ஐ பிட்டர் படித்து விட்டு மதுரையில் டி.வி.எஸ் சமுதாயக் கல்லூரியில் வேலை பார்த்து வருகிறார். இவர் ஏற்கனவே சோலார் மிதி வண்டி மற்றும் ஆள் துளைக்குழியில் குழந்தை விழுந்தால் மீட்கும் கருவியையும், கண்டுபிடித்துள்ளார். தற்பொழுது சோலார் மூலம் தானியாங்கி தண்ணீர் அடிக்கும் கருவியை உருவாக்கியுள்ளார்.



இந்த கருவியில் கூலிங் மோட்டார்–1, பிரேம்–1, கியர்பாக்ஸ்–1, பேட்டரி–1, சோலார் பேனல் – 2 (50 வோல்ட் திறன், 10 வோல்ட் திறன் ) சுவிட்ச் போர்டு – 1 உள்ளன. கூலிங்மோட்டார் – ரூ. 1000, கியர் பாக்ஸ் – ரூ. 1000, பிரம் – ரூ. 2000, நெம்புகோல் – ரூ. 1000, பேட்டரி ரூ. – 2800, சோலார் பேனல் – ரூ. 3700. மொத்தம் ரூ. 11,500 செலவாகும்.

கருவி வேலை செய்யும் விதம்: மேற்க்கண்ட அனைத்து உபகரணங்களும் பொறுத்தப்பட்டு பின்னர் சுவிட்ச் ஆன் செய்யப்படுகிறது. சுவிட்ச் ஆன் ஆனவுடன் சோலார் மூலம் இருக்கும் மின்சாரம் பேட்டரியில் சேமிக்கப்பட்டு பேட்டரியிலிருந்து மின்சாரம் மோட்டாருக்கு வந்தவுடன் நெம்பு கோலில் இணைக்கப்பட்டுள்ள அடி பைப் தானாக இயங்கி விடுகிறது. இத்துடன் தண்ணீர் தானாக மோட்டார் பைப்பிலிருந்து வெளி வருகிறது. ஒரு நிமிடத்திற்கு 1 குடம் தண்ணீர் நிரப்புவதுடன் நேரம் மீதமாகிறது.

**பயன்கள்:**இக்கருவியில் முதலில் இரும்பு நெம்புகோல் இணைத்து சோதனை செய்யப்பட்டத்தில் 10 ஆர்ம்ஸ் மின்சாரம் வந்தது. இதனால் இரும்பு கம்பியை எடுத்த பின்பு அலுமினியம் கம்பி பொறுத்தப்பட்ட பின்னர் 3–4 ஆர்ம்ஸ் மின்சாரம் வந்ததால் 5–7 ஆர்ம்ஸ் மின்சாரம் மீதமாகிறது. முதலில் 10 அடி குழியிலிருந்து தண்ணீர் பெறப்பட்டு சோதனை செய்ததில் தண்ணீரின் அளவு மிகக் குறைவாக வந்தது. தற்பொழுது 100 அடி குழியிலிருந்து தண்ணீர் பெறுமாறு கருவியை இணைப்பு செய்யப்பட்டுள்ளது. இக்கருவியினால் 1 மணி நேரத்திற்கு 1200 லிட்டர் தண்ணீர் பெறலாம் . அதாவது ஒரு நாளைக்கு 12,000 லிட்டர் தண்ணீர் பெறலாம் என்று சொல்கிறார். இக்கருவியின் விலை ரூ. 10,000 ஆகும். இக்கருவி தற்பொழுது மதுரை மாவட்டம் பரவை எனும் கிராமத்தில் திரு. முரளி என்பவரது தோட்டத்தில் வைக்கப்பட்டு சோதனை செய்யப்பட்டது. இக்கருவியின் சிறப்புகளைப் பற்றி திரு. முரளியும் பகிர்ந்து கொண்டார். முரளி தனது வீட்டடி மனை பகுதியில் ஓர் ஆழ்குழாய் போட்டு இதிலிருந்து நீர் எடுக்க மின்சார மோட்டாருக்கு ஏற்பாடு செய்தார். இவருடைய வீட்டடி இடம் பஞ்சாயத்தில் ஒப்புதல் பெறப்படாததால் இவருக்கு மின்சார இணைப்பு கிடைக்கவில்லை. இந்த சமயத்தில் மின்சாரமில்லாமல் இயங்கும் சூரிய சக்தி மோட்டார் வரபிரசாதமாக அமைந்தது என கூறுகிறார்.

மணிகண்டன் சோலார் சைக்கிளும் வடிவமைத்துள்ளார்.

**சோலார் சைக்கிள்**



12 வோல்டேஜ் பேட்டரி முலம் இயங்கும். இதில் டி.சி மோட்டார், சுவிட்ச் பாக்ஸ் உள்ளன. இந்த மோடடார் கார்களில் கண்ணாடியை துடைக்கும் (மழைநீரை நீக்கும்) வைப்பரை இயக்கும் மோட்டாராகும். இந்த சைக்கிள் மணிக்கு 15 கி.மீ. தூரம் செல்லும். இரவிலும் அல்லது மேக மூட்டம் உள்ள நாட்களிலும் 3 1/2 மணி நேரம் வரை இயங்கும். இவர் ஹெர்குளிஸ் சைக்களிலில் இந்த சோலார் பேனலை அமைப்பை பொருத்த ரூ. 5,000 வரை செலவாகும் என கூறுகிறார். மணிகண்டன் முகவரி 21ல் உள்ளது.

## அமிர்தத்தின் கால்நடை வைத்தியம்

விருதுநகர் மாவட்டம் திருச்சுழி வட்டம் புல்வாய்க்கரை கிராமத்தில் திருமதி. அமிர்தம் (58) வசித்து வருகிறார். இவர் 5 ம் வகுப்பு வரை படித்துள்ளார். இவருக்கு சொந்தமாக ஓர் ஏக்கர் நிலம் உள்ளது. இதில் நெல் மற்றும் காய்கறிகள் பயிரிட்டு மகசூல் பெற்று வருகிறார். இவர் 2 கறவை மாடு, 5 வெள்ளாடு, 10 நாட்டுக்கோழிகள் பராமரித்து வருகிறார். இவர் மூலிகை வைத்திய முறையை தனது தாயாரிடம் கற்றுக் கொண்டுள்ளார். இவரது மூலிகை வைத்திய முறைகள் பின்வருவன.

**ஆடு மாடு கழிச்சலுக்கு**

முருங்கை இலை சாறு – 50 மி.லி இதனுடன் 20 கிராம் சர்க்கரை சேர்த்து 1 வேளை கொடுக்க வேண்டும்.

**இரத்தக் கழிச்சலுக்கு**

முள் கிலுவை இலை 2 கைப்பிடி இதனுடன் மாதுளம் பழத்தோல் 50 கிராம் அளவு எடுத்து அரைத்து மாட்டிற்கு 50 மி.லியும், ஆட்டிற்கு 20 மி.லியும் 2 வேளைக்கு கொடுக்க வேண்டும்.

**ஆறாத புண்ணிற்கு**

சிறு தும்பை பூ – 2 கைப்பிடி எடுத்து அரைத்து இதனுடன் வேப்பெண்ணெய் 20 மி.லி சேர்த்து 2 வேளை புண் மீது தடவ வேண்டும்.

**இரை திண்ணாமலிருந்தால்**

தேவையான பொருட்கள்: சுக்கு – 10 கிராம், மிளகு – 10 கிராம், வெற்றிலை – 5 எண்ணம், ஓமம் – 10 கிராம், பெருங்காயம் – 20 கிராம். மேற்க்கண்ட அனைத்தும் சேர்த்து அரைத்து மாட்டிற்கு 50 மி.லியும், ஆட்டிற்கு 20 மி.லியும் கொடுக்க வேண்டும்.

சி. அமிர்தம்
க/பெ. செல்லம்
புல்வாய்க்கரை கன்மாய் அருகில்,புல்வாய்க்கரை அஞ்சல் ,திருச்சுழி வட்டம் ,விருதுநகர் மாவட்டம்

## உரம் வைக்க குழி எடுக்கும் கருவி

திருச்சி மாவட்டம் லால்குடி வட்டம், பல்லாபுரம் எனும் கிராமத்தில் திரு.ஜானி டெஸ்மீர் (41) வசித்து வருகிறார். இவர் 5ம் வகுப்பு வரை படித்துள்ளார். இவருக்கு 2 குழந்தைகள் உள்ளனர். இவர் பள்ளி படிப்பு முடித்ததும் 1996 ம் ஆண்டிலிருந்து சிறுதொழில் ஜேடி இண்டஸ்ட்ரி நடத்தி வருகிறார். இதில் இயற்கை சாம்பிராணி, கரும்பு கரணை வெட்டும் கருவி உருவாக்கியுள்ளார். இவரை பற்றிய விவரம் சென்ற இதழில் (பருவம் 25 இதழ் 4 ) பிரசுரிக்கப்பட்டுள்ளது. இந்த கரணை வெட்டும் கருவியை இயக்க ஓர் ஆள் மட்டும் போதுமானது. இரண்டு கால் கொண்டும் கால் மாத்தி மாத்தி அழுத்தலாம். இதை உபயோகப்படுத்துவது மிகவும் எளிமையானது இதனுடைய விலை ரூ. 2000 ஆகும்.

**பயிர்களுக்கு உரம் வைக்கும் கருவி**



கருவியின் பாகங்கள்: இரும்பு குழாய் 3.5 அடி, 5 செ.மீ அகலம் – 1, திருகு– 1 . இரும்பு குழாயை எடுத்து மண்ணில் வைத்து அழுத்தினால் 1/2 அடிக்கு துளை விழும். இதனைக் கொண்டு கரும்பு, வாழை, தென்னை மற்றும் காய்கறிப் பயிர்களுக்கு உரம் வைப்பதற்கு கீழ் ஸ்பிரிங் மற்றும் குழாயினுள் மண் எடுக்குமாறு தகடு பொருத்தினால் மிகச் சிறப்பாக இருக்கும் என்று கூறுகிறார். இக்கருவி செய்ய ரூ. 800 ஆகிறது என்று . ஜானிடெஸ்மீர் கூறுகிறார்.

ஜானிடெஸ்மீர்
ஜேடி ஆர். இண்டஸ்ட்ரீஸ்
பள்ளபுரம், அரியலூர் மெயின் ரோடு,
லால்குடி வட்டம், திருச்சி மாவட்டம் – 621712
செல்: 96262927599

## நாகராஜனின் ரிப்பன் நெல் நடவு முறை



திருச்சி மாவட்டம் துறையூர் கிராமத்தில் திரு. நாகராஜன் (23) வசித்து வருகிறார். இவர் 12ம் வகுப்பு வரை படித்துள்ளார். இவர் படிக்கும் போது துறையூர் கிராமத்தில் விவசாயிகள் நெல் நடவு முறையை பார்த்துள்ளார். அப்பொழுது விவசாயிகள் ஓர் ஏக்கருக்கு 6–8 பேர்

கூலியாட்கள் கொண்டு நெல் நடவு செய்தல் மற்றும் கால் சேத்து புண் போன்ற உடல் உபாதைகளும் வருவதைக் கண்ட இவர் குறைந்த செலவில் ரிப்பன் நெல் நடவு நடும் இயந்திரத்தை வடிவமைப்பு செய்து வருகிறார். அக்கருவியின் விவரம் பின்வருமாறு:

**கருவியின் முக்கிய பாகங்கள்**

ரப்பர் டயர்– 2, கொழு– 4, டிஸ்க்– 4, மரக்கட்டை கைப்பிடி– 1, டெக்ஸஸ் பெக்– 1,

**கருவி வேலை செய்யும் விதம்**



நியூஸ் பேப்பரை நீளமாக இரண்டு மடிப்பு வருமாறு வெட்டி அதில் பசையை ஓர் அங்குலம் என இடைவெளி விட்டு ஒட்ட வேண்டும். ஒட்டிய பின்னர் டிஸ்கில் பொருத்தபட்ட கொழுவின் வழியாக பேப்பரை வைக்க வேண்டும். பின்னர் பேப்பரின் கீழ் பகுதியில் ஒரு பைப் வைத்து மரக்கட்டை பைப் கொண்டு இழுக்கும் போது டிஸ்கில் பொருத்தப்பட்ட பேப்பர் ரோலாகி நிலத்தில் புதைகிறது. இதனால் பேப்பர் நிலத்தில் மடக்கப்பட்டு நெல் மணிகள் முளைக்கின்றன. இந்த டிஸ்கில் சுமார் 1500 மீட்டர் நீளம் அளவு வரை சுற்றலாம். இதில் மொத்தமாக 4 டிஸ்க் உள்ளது. (4 x1500= 6000) 6000 மீட்டர் நீளம் வரை பேப்பர் சுத்தலாம். இக்கருவியின் மூலம் ஒரு மணி நேரத்திற்குள்ளே ஓர் ஏக்கரில் நடவு செய்யலாம். நெல் நடவு வரிசை முறையில் 25 செ.மீ இடைவெளி விட்டு நடப்படுகிறது. இம்முறையை துறையூர் கிராமத்திலுள்ள திரு. தங்கராஜ் என்பவரது நிலத்தில் நெல் பயிரிட்டு சோதனை செய்து பார்த்ததில் விவசாயிகளுக்கு திருப்திகரமாக அமைந்தது என நாகராஜ் கூறுகிறார். இக்கருவியின் மூலம் நெல் மட்டுமல்லாமல், மிளகாய், மல்லி, சோளம், தக்காளி போன்ற பயிர்களையும் நடவு செய்யலாம் எனக் கூறுகிறார். தற்பொழுது சிறிய முறையில் வடிவமைத்துள்ளார் இதையே பெரிய வடிவில் மெஷின் தயாரிக்க ரூ. 60,000 வரை செலவாகும் எனக் கூறுகிறார்.

நாகராஜ், த/பெ. குப்புச்சாமி, துறையூர்
திருச்சி மாவட்டம், செல்: 9677967038

## இளநீர் துளை போடும் & வெட்டும் கருவி

திரு. குரச்சந்திரன் (வயது 62) நாகபட்டிணத்தில் வசித்து வருகிறார். இவர் ஐடிஐ படித்துவிட்டு லேத் பட்டறை வைத்துள்ளார். இவர் இளநீர் துளை போடவும் இளநீரை வெட்டவும் கருவி ஒன்றை வடிவமைத்துள்ளார். ஏற்கனவே இவரும் இவர் தந்தையும் சேர்ந்து மூன்று சக்கர டிராக்டர் வடிவமைப்பு உருவாக்கியுள்ளார்கள்.

**இளநீர் துளை போடும் மற்றும் வெட்டும் கருவி**

இளநீர் விற்கும் வியாபாரி ஒரு இளநீரை துளை போடுவதற்கு 5 – 6 முறை இளநீரை அரிவாளால் சீவ வேண்டியுள்ளது. பின்பு இரண்டு முன்று முறை வெட்ட வேண்டியுள்ளது. இதனால் அவர் வெட்டும் போது பலருக்கு கை விரல்கள் வெட்டுப்படுகிறது. அதனால் சில நேரங்களில் விரல்களை இழக்க நேரிடுகிறது. ஒரு இளநிரை வெட்டி முடிக்க அவர் 10 கிலோ சக்தியை செலவிட வேண்டியுள்ளது. இச்சிரமங்களிலிருந்து விடுபட இவர் ஒரு எளிய கருவியை வடிவமைத்துள்ளார்.

**இளநீர் துளை போடும் மற்றும் வெட்டும் கருவி**

இக்கருவி எம்.எஸ் ஸ்டீல் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. இதில் இரண்டு தேங்காய் வைக்கும் தளம் உள்ளது. ஒரு தேங்காய் வைக்கும் தளத்திற்கு மேல் துளை போடுவதற்கு ஒரு ஸ்குரு உள்ளது. இன்னொரு தேங்காய் வைக்கும் தளத்திற்கு மேல் ஒரு கத்தியும் உள்ளது. தேங்காய் துளை போடும் ஸ்குரு மற்றும் தேங்காய் வெட்டும் கத்தி இரண்டையும் இயக்க ஒரு கைபிடி உள்ளது. அக்கைபிடியை அமுக்கினால் ஒரே நேரத்தில் இளநீரை துளை போடவும் இன்னொரு இளநீர் குடித்து முடிந்த தேங்காயை வெட்டவும் முடியும். இல்லையென்றால் தனித் தனியாகவும் இயக்க வேண்டும்.

கே.வி. குருசந்திரன்
த/பெ. வேலுச்சாமி, ஹீப்பர் தெரு
நாகப்பட்டிணம், செல்:9150103624

தொகுப்பு : பாலசுப்ரமணியன், சேவா

## சிக்கிமில் இயற்கை வேளாண்மை

பிரதமர் மோடி சிக்கிம் மாநிலத்தைப் பற்றி இப்படிச் சொல்லியிருக்கிறார். ‘‘இயற்கை வேளாண்மையில் இந்தியாவுக்கு மட்டுமல்ல உலகத்துக்கே வழிகாட்டியாக சிக்கிம் திகழும்’’. இப்படி புகழாரமே சூட்டியிருக்கிறார். அப்படி என்ன செய்து கொண்டிருக்கிறது சிக்கிம்?

### முதல்வரின் முழு முயற்சி

இதற்கு முக்கிய காரணமாகத் திகழ்ந்தவர் அந்த மாநிலத்தின் முதல்வர் பவன் குமார் சாம்லிங், தொடர்ந்து ஐந்தாவது முறையாக முதல்வராக இருக்கும் இவர் அடிப்படையில் ஒரு விவசாயி. உணவையும் நிலத்தையும் நஞ்சாக்கும் நவீன விவசாயத்திலிருந்து மாற்றத்தை விரும்பிய பவன்குமார் 2003ல் சிக்கிம் மாநிலத்தை ‘‘ஆர்கானிக் ஸ்டேட்’’ எனச் சட்டப்பேரவையில் பிரகடனம் செய்தார். மாநிலத்தில் ரசாயன உரங்களுக்கும் பூச்சிக்கொல்லிகளுக்கும் முற்றாகத் தடை விதிப்பப்படுகிறது. தடையை மீறுவோருக்கு ‘‘ ஒரு லட்ச ரூபாய் அபராதம், மூன்றாண்டுகள் சிறைத் தண்டனை’’ எனவும் தடாலடியாக அறிவித்தார்.

வழக்கம் போல் இந்த அறிவிப்பு அரசியலாக்கப்பட்டு எதிர்ப்புகள் தூண்டிவிடப்பட்டன. எதைப்பற்றியும் கவலைப்படாத பவன்குமார் தனது திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக ‘‘ஆர்கானிக் ஸ்டேட் போர்டு’’ என்ற அமைப்பை ஏற்படுத்தினார். அடுத்த ஆறு ஆண்டுகளுக்கு மாநிலத்தில் 8 ஆயிரம் ஏக்கர் நிலங்களை இயற்கை விவசாயத்திற்கு மாற்றுவது என தீர்மானித்துக் கொண்டு செயலில் இறங்கியது இந்த வாரியம்.

### மத்திய மானியம் மறுப்பு

ஒரு பக்கம் இயற்கை வேளாண்மையை ஆதரிக்க வேண்டிய அவசியம் குறித்து மக்களிடையே விழிப்புணர்வு பிரச்சாரம். மறுபுறம் இயற்கை வேளாண்மையை மேற்கொள்வதற்கும் இயற்கை உரங்களைத் தயாரிப்பதற்கும் தாராளமான மானியங்களை வழங்கியது மாநில அரசு. மாநிலம் முழுவதும் 24,536 இயற்கை உரத் தயாரிப்பு மையங்களும் 1,447 பசுந்தாள் உரத் தயாரிப்பு மையங்களும் அரசால் நிறுவப்பட்டன. இயற்கை உரத் தயாரிப்பு முறைகள் குறித்து உழவர்களுக்குப் பயிற்சியும் அளிக்கப்பட்டது. இந்த நடவடிக்கைகளால் 2009 ம் ஆண்டு இறுதிக்குள் எட்டாயிரம் ஏக்கர் நிலங்கள் இயற்கை வேளாண்மைக்கு மாற்றப்பட்டன. இதற்கிடையே 2006–07 ம் ஆண்டில் மத்திய அரசு வழங்கிய மானியத்துடன் கூடிய ரசாயன உரக் கோட்டாவை வேண்டாம் என்று அறிவித்தார் பவன்குமார். அடுத்த கட்டமாக ஓராண்டுக்குள் 14 ஆயிரம் ஏக்கரை நஞ்சில்லா பூமியாக மாற்றுவது எனத் திட்டமிடப்பட்டு அதுவும் நிறைவேற்றப்பட்டது.

### உயிர் கிராமங்கள்

இதன் தொடர்ச்சியாக ‘‘சிக்கிம் ஆர்கானிக் மிஷன்’’ என்ற அமைப்பு உருவாக்கப்பட்டு அதன் கீழ் கிராமங்கள் தத்தெடுக்கப்பட்டு இயற்கை வேளாண்மை முறைகள் பிரபலப்படுத்தப்பட்டன. இந்தக் கிராமங்கள்‘‘பயோ வில்லேஜ்‘‘ என்று அழைக்கப்பட்டன. நல்ல திட்டங்கள் பலன் தராமல் தோற்றுப்போனதற்குக் காரணமே தொடர் ஆராய்ச்சிகளும் வளர்ச்சியும் இல்லாமல் போனதுதான். இதைப் புரிந்து கொண்டு இயற்கை வேளாண்மையை மேம்படுத்தவும் அடுத்த கட்டத்துக்கு நகர்த்தவும், சென்டர் ஆஃப் எக்சலன்ஸ் ஃபார் ஆர்கானிக் ஃபார்மிங் (Center of Excellence for Organic Farming ) என்ற ஆராய்ச்சி மையத்தை உருவாக்கினார். இத்தனை முன்னேற்பாடுகளுடன் 2015 ம் ஆண்டு இறுதிக்குள் சிக்கிம் மாநிலத்தை நஞ்சில்லா விவசாயப் பூமியாக மாற்றத் திட்டமிட்டு அதை வெற்றிகரமாகச் சாதித்துக் காட்டியிருக்கிருக்கிறது பவன்குமார் சாம்லிங் அரசு.

தொடக்கத்தில் சில சிரமங்கள் இருந்தாலும் இப்போது சிக்கிம் விவசாயிகளுக்கு இயற்கை வேளாண்மையின் மகத்துவம் புரிகிறது. இவர்கள் விளைவிக்கும் இயற்கை வேளாண் பொருட்களை வாங்குவதற்கு டெல்லி, மத்திய ஆசிய நாடுகளில் தவம் கிடக்கிறார்கள்.

### எடுபடாத எதிர்ப்பு

அண்மையில் சிக்கிம் சென்றிருந்த தேசியப் பிற்பட்டோர் ஆணையத்தின் உறுப்பினர் கார்வேந்தன் அங்குள்ள இயற்கை வேளாண் நிலங்களை பார்வையிட்டு விவசாயிகளை சந்தித்து திரும்பியிருக்கிறார். தன்னுடைய அனுபவத்தை அவர் பகிர்ந்து கொண்டார். தானும் ஒரு இயற்கை விவசாயிதான். அந்த ஆர்வத்தில் சிக்கிம் விவசாயிகளைச் சந்தித்துப் பேசினேன். சிக்கிமின் சில மலைப் பகுதிகளில் வாழும் ஒரு சிலர் இயற்கை விவசாயத்தை எதிர்த்தாலும், அது எடுபட வில்லை. சிக்கிம் மாநிலத்தில் சுமார் 50 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்கள் உள்ளன. இயற்கை வேளாண்மை மூலம் கடந்த ஆண்டில் மட்டுமே 80 ஆயிரம் மெட்ரிக் டன் விளை பொருட்களை சிக்கிம் விவசாயிகள் உற்பத்தி செய்திருக்கிறார்கள். இதில் இஞ்சி 45,890 மெட்ரிக் டன், மோட்டா ரக மிளகு 3,510 மெட்ரிக் டன், மஞ்சள் 2,790,

மெட்ரிக் டன், சன்னரகக் கோதுமை 4,100 மெட்ரிக் டன், ஆண்டுக்கு மூன்று மாதங்கள் அங்கே கடும் குளிர் நிலவும், அதை சமாளிப்பதற்காக உடலுக்குக் கேட்டை உண்டாக்காத ரசாயனம் கலக்காத ''பயோ விஸ்கி'' யையும் அங்கே தயாரிக்கிறார்கள்.

**இயற்கை உரத் தொழிற்சாலை**

பயோஃபெர்ட்டிலைசர்ஸ் என்று சொல்லப்படும் இயற்கை உரம் தயாரிக்கும் பெரும் தொழிற்சாலையை அரசே நிறுவியிருக்கிறது. இதன் மூலம் ஒரே நேரத்தில் 3000 மெட்ரிக் டன் இயற்கை உரம் தயாரிக்க முடியும். தெற்கு சிக்கிமில் ராவங்கலா என்ற இடத்தில் 440 ஏக்கரில் அரோமா ஆர்கானிக் தேயிலைத் தோட்டத்தையும் அரசு நடத்துகிறது. இங்கு விளையும் உலகத் தரம் வாய்ந்த தேயிலை பெருமளவு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. மிகவும் பின் தங்கிய சிக்கிம் மக்கள் ரசாயனத்தின் ஆபத்தை உணர்ந்து இயற்கை விவசாயத்துக்கு மாறிவிட்டார்கள். ஆனால் நாம் அது குறித்த விழிப்புணர்வு கூட இல்லாமல் இருப்பது வேதனையளிக்கிறது என்கிறார் கார்வேந்தன்.

ஜனவரி 18 ம் தேதி சிக்கிமில் நடந்த விவசாயிகள் கருத்தரங்கில் இயற்கை விவசாயத்தில் சாதித்த பவன்குமார் சாம்லிங்குக்கு பாராட்டுப் பத்திரம் வழங்கிக் கௌரவித்திருக்கிறார் பிரதமர் நரேந்திர மோடி.

**எப்போது மீள்வோம்?**

''பசுமைப் புரட்சிக்கு முன்பு நாட்டில் இவ்வளவு நோய்கள் இல்லை. அதிக மகசூல் என்று ஆசைகாட்டி நிலங்களையும் உண்ணும் உணவையும் விஷமாக்கி விட்டார்கள். ரசாயன உரங்கள், உணவு உண்ணும் அத்தனை உயிர்களையும் சிறுகச் சிறுகக் கொல்கின்றன. ரசாயன உரங்களையும், பூச்சிக்கொல்லிகளையும் ஒழிக்கப் போராடுவதுதான் இப்போது முக்கியம்''.

கடந்த ஆண்டில் மட்டும் இந்தியாவில் 10 லட்சம் பேர் புற்று நோய் பாதிப்பால் இறந்திருக்கிறார்கள். இதில் பெரும்பாலானவர்கள் பெண்கள், குழந்தைகள் இதற்கு ரசாயன உரங்களும், பூச்சிக்கொல்லிகளும் முக்கியக் காரணம். சிக்கிமைத் தொடர்ந்து உத்ரகாண்ட், கேரளம், கர்நாடகம் உள்ளிட்ட மாநிலங்கள் இயற்கை விவசாயத்தை நோக்கி நகர ஆரம்பித்திருக்கின்றன. ராஜஸ்தான், பஞ்சாப் மாநிலங்களில் இது குறித்த விவாதங்கள் தொடங்கி விட்டன. ஆனால் வளமான விவசாய பூமியைக் கொண்ட தமிழகத்தில் இயற்கை விவசாயம் குறித்த புரிதல் வேளாண் அதிகாரிகளுக்கே இல்லை'' என்கிறார் கார்வேந்தன். மெல்லக் கொல்லும் ரசாயனத்தின் பிடியிலிருந்து சிக்கிம் மீண்டு விட்டது. இதனால் சிக்கிம் மக்களின் ஆரோக்கியம் உயர்ந்துள்ளது. மக்களின் நோய் எதிர்ப்பு உயர்ந்துள்ளது. விவசாயிகள் மகிழ்ச்சியாக உள்ளனர். இயற்கை விவசாயம் மூலம் தான் மக்கள் ஆரோக்கியமாக வாழ முடியும். எனவே தமிழக முதல்வருக்கு நஞ்சில்லாத இயற்கை வேளாண்மையை செயல்படுத்துமாறு இதைப்படிக்கும் நண்பர்கள் தபால் கார்டு மூலம் வேண்டுகோள் விடுக்கலாம் என்று திரு.கோமதிநாயகம் கூறுகிறார்.

திரு. கோமதிநாயகம்
விவசாய சேவா நிலையம்
சி.பீ. காம்ப்ளக்ஸ், காந்தி பஜார்
புளியங்குடி
தொலைபேசி– 0463– 6233235
செல்: 9629952636

## கமலபதியின் தண்ணீர் இறைக்கும் கருவி

நாகப்பட்டிணம் மாவட்டம் சங்கமங்கலத்தில் வசிப்பவர் கமலபதி (வயது 52) . இவர் 6 ம் வகுப்பு வரை படித்துள்ளார். இவருக்கு 10 ஏக்கர் விவசாய நிலம் உள்ளது. இவர் வாய்க்காலிருந்து வயலுக்கு தண்ணீர் பாய்ச்சுவதற்காக ஜீ.ஐ பிளேடுனால் ஒரு கருவியை வடிவமைத்துள்ளார்.



வாய்க்காலில் நீர் வரத்து குறைவாக இருக்கும் நேரத்தில் இரண்டு நபர்கள் இறைப்பு நடை கொண்டு வயலுக்கு தண்ணீர் இறைப்பார்கள். இவருக்கு இரண்டு நபருக்கு பதிலாக ஒரே நபர் தண்ணீர் பாய்ச்சுவதற்கு ஏதுவாக ஒரு கருவியை வடிவமைக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது.

இதை கருத்தில் கொண்டு 6 அடி நீளம் 11/2 அடி விட்டம் அளவிற்கு குழாயை வடிவமைத்தார். அதன் உள்ளே ஒரு இரும்பு அச்சில் தகடுகளாக சுழல் வடிவமாக இணைத்து வடிவமைத்தார். குழாயை ஒரு முனையில் அச்சு நீளமாக நீட்டிக்கொண்டு அதன் முனை கூர்மையாக உள்ளது. மறு முனை ட வடிவத்தில் சுற்றுவதற்கு தகுந்தாற்போல் கைபிடியாக அமைக்கப்பட்டுள்ளது. கூர் வடிவ அச்சை வாய்க்காலில் ஒரு மரக்கட்டையில் இணைத்துவிட வேண்டும். குழாய் பாதி விட்ட அளவு தண்ணீரில் மூழ்கி இருக்க வேண்டும். தற்போது தண்ணீர் இறைக்கும் குழாய் சற்று சாய்வாக அமைக்கப்பட்டு கூர் முனை வாயக்கால் தண்ணீரிலும் மறு முனை வயலிலும் இருக்கும். தற்போது கைபிடியை ஒருவர் சுற்றினால் அதில் உள்ள சுருள் வடிவ பட்டை மூலம் தண்ணீர் வாய்க்காலிருந்து வயலுக்கு தண்ணீர் வந்து பாய்கிறது. இதன் மூலம் ஒருவர் மூன்று மணி நேரத்தில் 1 ஏக்கர் நிலத்திற்கு தண்ணீர் பாய்ச்சி விடலாம்.

கே.எம். கமலபதி
த/பெ. கே.முக்கையன்
1/27, சங்கமங்கலம் கீழ தெரு
சிக்கல் அஞ்சல், நாகப்பட்டிணம் மாவட்டம்
செல் : 9965211121

## கிரிஷி கீதா வேளாண்மை பாட்டு

(அக்டோபர்– டிசம்பர் 2014ன் இதழின் தொடர்ச்சி)

பரசுராமர் தனது குலதெய்வமான சிவனை "இறைவா, சுத்த சுரூபியே, பேரின்பத்தைக் கொடுப்பவரே, அனைத்துயிர்களையும் காப்பவரே, சந்திரனையும் சூரியனையும் கண்களாக கொண்டவரே, பார்வதியின் கணவரே, மலைகளின் அதிபதியோ, தேவாதிதேவனே" என 12 ஸ்லோகங்களால் பிரார்த்தனை செய்து விட்டு பிராமணர்களுக்கு விவசாயம் சம்பந்தப்பட்ட நுணுக்கங்களை தொடர்ந்து சொல்லலானார். இந்த நுணுக்கங்களெல்லாம் பெரிய ரிஷிகளாலும், முனிவர்களாலும் முன்பு கூறப்பட்ட உண்மையாகும். நிலத்தில் மண்கட்டியில்லாமல் உடைத்து பரப்பிவிட வேண்டும். குறைந்தது 10 தடவை மாட்டு உழவு செய்து நிலத்தை பொல பொலப்பாக வைக்க வேண்டும். வரப்புகள் நன்கு உயரமாக வைக்க வேண்டும்.

விதைக்கும் சமயம் மழை பெய்யும் காலத்தை தெரிந்து கொள்ள வேண்டும். பெரிய மழை பெய்யும் சமயம் விதைப்பதைத் தவிர்க்க வேண்டும். எள்ளை பரணி நட்சத்திரத்தில் (சித்திரையில்) விதைப்பது நல்லது. முண்டம்பள்ளி என்ற நெல்ரக விதையையும் பணிவரகு விதையையும் இதே காலத்தில் விதைக்கலாம்.

ஈரப்பதத்தில் விதைக்க வேண்டுமானால் ரோகினி நட்சத்திரத்திற்குள் விதைத்து விட வேண்டும். மலையாளத்தில் ரோகினிக்குப்பின் விதைப்பது உகந்ததல்ல. பரம்பில், மோடன் போன்ற நெல்ரகங்கள் மேட்டு நிலத்தில் பரணி நட்சத்திரத்தில் விதைக்க வேண்டும். பரம்பன் கழமா நெல்ரகம் ரோகிணியில் விதைத்தால் நல்ல பலன் தரும். வலியாத்து ரகத்தை மிருகசிருஷம் நட்சத்திரத்தில் விதைக்கலாம்.

நெல் நடவு செய்யுமுன்னர் பசுந்தாள் உரம் இட வேண்டும். குப்பையை எரித்து சாம்பலை இடுவதால் வயலில் களைச்செடிகள் முளைக்காது. நிலத்தில் ஊற்றில்லாமல் சுண்ணாம்பு திட்டு இருக்குமானால் நெல்லைத் தவிர பிற தோட்டப்பயிர்கள் நன்கு முளைக்கும்.

ஆற்றுக்கு மிக அருகாமையிலுள்ள நிலத்தில் நீர் தேங்குமாதலால் நல்ல பயிர் விளைச்சல் வராது.

சிலர் களர்நிலைத்தை வாங்கி விவசாயம் செய்ய முயலுபவர்கள் முட்டாள்களாவார்கள். நிலத்தில் மணலும், மண்ணும் சமமாக இருக்க வேண்டும். இதில் எரு இட்டு இரு போகம் விவசாயம் செய்யலாம். செந்நெல் 3 மாதத்திற்குள் விளையும் நெல்ரகம். இந்நிலத்தில் நீர் அதிகம் தேங்காமல் வடிகட்ட வேண்டும்.

மேட்டுப்பகுதியில் தானியங்களை விதைப்பது ஆனி மாதத்தில் விதைக்க வேண்டும். தட்டைப்பயிறும், உளுந்தும் சேர்ந்து விதைத்தால் ஒரே சமயத்தில் அறுவடைக்கு வரும். நிலத்தில் கொளுஞ்சி அதிகம் முளைத்திருந்தால் சேருமோடன் என்ற நெல்ரகம் விதைக்க வேண்டும்.

முன்னொரு காலத்தில் உண்மையை பேசி நேர்மையாக வாழ்ந்து வந்த வெள்ளன் என்பவன் இருந்தான். இவன் இந்திரனை வழிபட்டதன் பயனாக பூமிக்கு எல்லா பயிர்ரக விதைகளும் வந்து விட்டன. இச்சமயம் பனிவரகு மட்டும் ஈரம் அதிகமாக உள்ள நீர் பகுதியில் தான் வர முடியாது எனக் கூறியது. ஆனால் விஷ்ணு பக்தர்கள் வாழும் பகுதியில் தான் இருக்க விரும்புவதாகவும் அப்பகுதியில் வறட்சி வந்தால் ஈரப்பதம் குறையும். அச்சமயத்தில் தான் தோன்றி பக்தர்களுக்கு உணவாவேன் என்று கூறியது. இச்சமயத்தில் அப்பகுதியில் உண்மையும், தர்மமும் இருந்ததால் எல்லா வகை பயிர் விதைகளும் நன்கு முளைத்து செழுமையை ஏற்படுத்தியது. உண்மையே

கடவுள் என்பதற்கு இதுவே சான்றாகும் என்று பரசுராமர் கூறினார்.

சித்திரை, ஆடி மாதங்கள் தவிர்த்து மற்ற எல்லாமாதங்களிலும் நடவு செய்யலாம்.

ஆவனி மாத பவுர்ணமி செழுமையைக் குறிக்கும். விசு அல்லது புது ஆண்டு பிறப்பது திங்கள் அல்லது புதன் கிழமையாயிருந்தால் நல்ல மழை பொழிவு ஏற்படும்.

விசு ஞாயிறு அல்லது திங்கள் கிழமை அன்று பிறந்தால் (2 மரக்கால் அளவு மட்டும் தான்) குறைவான மழைபொழிவு அதாவது குறைந்த மழை பெய்யும். வியாழன் அல்லது வெள்ளியில் பிறந்தால் 4 மரக்கால் அளவு மிதமான மழை பொழிவு உண்டாகும்.

மாடுகளின் லட்சணங்களையும் அவை வேலை செய்யும் திறனையும் பற்றி எடுத்துரைத்தார்.

மேற்கண்டவாறு பரசுராமர் கேரள தேசத்து பிராமணர்களுக்கு விவசாயம் செய்வதை எடுத்துரைத்தார். பின்னர் அவரவர் இருப்பிடம் செல்ல ஆயத்தமாயினர். இச்சமயத்தில் அந்நாட்டு தெய்வங்கள் தோன்றி பரசுராமரை கைகூப்பி வணங்கி நின்றன. பரசுராமரும் தனது இருப்பிடமான பார்கா மலைச் சாரலுக்கு சென்று விட்டார்.

## இயற்கை மூலிகை மருந்து தயாரித்தல்

வேப்பிலை, ஆடாதொடை இலை, சோற்றுக்கற்றாலை, நொச்சி இலை, எருக்கு இலை இவைகளை மொத்தம் சுமார் 7 கிலோ எடுத்து நறுக்கி ஒரு பிளாஸ்டிக் பேரில் இட வேண்டும். இது நன்றாக மூழ்குமாறு 10 லிட்டர் நாட்டு மாட்டு கோமியம் விட வேண்டும். இதனை ஒரு வாரம் ஊற வைத்து வடிகட்டி பயிரின் பூச்சி நோய்களுக்கு தெளிக்க வேண்டும். 10 லிட்டர் நீருக்கு 1/2 லிட்டர் மூலிகை கரைசல் விகிதத்தில் கலந்து தெளித்தால் பூச்சிகள் கட்டுப்படும். இதனை கடந்த 6 மாதங்களாக எனது பண்ணையில் காய்கறி பயிர்களுக்கும், பூ செடிகளுக்கும் தெளித்ததில் நல்ல பலன் கிடைத்தது. எனது மல்லிகை செடியில் பூமொட்டில் சில மொட்டுக்கள் சிவப்பாக மாறி காய்ந்து விடும். இந்த மொட்டுக்களில் சிறு புழுக்கள் உள்புறம் காணப்படும். இந்த குருத்து புழுக்களுக்கு வேப்பங்கொட்டை கரைசலுடன் மேற்கண்ட மூலிகை கரைசலை சேர்த்து தெளிக்கலாம். நான் 200 கன்றுகள் எலுமிச்சை நட்டுள்ளேன். இதில் பறவைகளின் எச்சம் போன்று புழுக்கள் காணப்படுகின்றன. இப்புழுக்களை வேலையாட்களை கொண்டு பொறுக்கி அப்புறப்படுத்துவது சிறந்த வழியாகும். இதனுடைய தாய்



பூச்சியை அதாவது பச்சை நிற வண்ணத்துப்பூச்சியை அடையாளம் தெரிந்து விளக்கு பொறி மூலம் பிடித்து அப்புறப்படுத்தலாம்.

நான் மாடுகளுக்கு சூபா புல் மரங்களை உண்டாக்கி 5–10 கிலோ தீவனமாக கொடுத்து வருகிறேன். சூபா புல் மரம் பூ பூத்து காய் பிடிக்க விடாமல் காவாத்து செய்து வர வேண்டும். இதனால் விதைகள் நிலத்தில் விழுந்து பரவாமல் இருக்கும்.

## இயற்கை முறையில் மாடுகள் சினை பிடிக்க

நான் நாட்டு மாட்டு இனங்களான தர்பார்க்கர், ஹரியான மாடுகளை வளர்த்து வருகிறேன். அவ்வப்போது கிடரிகள் அல்லது ஈத்து மாடுகள் சினை பிடிக்காமல் இருக்கும். இதற்கு வைத்தியம் பார்த்தும் பலன் கிடைக்காது.எனக்கு தெரிந்த நண்பர் மலையடிவாரத்தில் கிடை மாடுகள் வைத்துள்ளார். அந்த கிடை மாடுகளுடன் சேர்த்து மேய்க்க பழக்கப்படுத்தினேன். பின்னர் 2 மாதங்களில் கிடையில் உள்ள காளை விழுந்து சினை பிடித்தது.

மாடு மேய்ச்சலில் பல வகையான புற்களை மேய்வதாலும் இயற்கையாக காளையின் விந்து விழுவதாலும் மாடு சரியான பருவத்தில் சினை பிடித்து விடும்.

என். லெட்சுமணன்
2, பயனீர் காலனி
வேதம் டிரேடர்ஸ், திருமங்கலம் – 625 706
மதுரை மாவட்டம், செல் : 9842194848

## பிற மாநில உத்திகள்

### மாடுகளுக்கு வயிறு சம்பந்தப்பட்ட பிரச்சனைகளுக்கு

வெற்றிலை 4 எண்ணம், இஞ்சி 50 கிராம், சிறிது பச்சை கற்பூரம் அரைத்து ஒரு நாளைக்கு 2 தடவை வீதம் 3 நாட்கள் தர வேண்டும்.

–– சிபநாராயணா, திவான்முண்டா, பன்வாட் நவபடா மாவட்டம், ஒரிஸ்ஸா – தேனீ – 27101

### ஆடுகளில் உன்னி, பேன் நீக்க

ஆட்டு கொட்டைகையில் உள்ளேயிருக்கும் 65 ஆடுகளில் உன்னி, பேன் நீக்க 4 வாத்துகளை இரவில் விட வேண்டும். இவை ஆட்டின் வயிற்றுப் பகுதியிலுள்ள உன்னி, பேன்களை தின்று விடும் என்று சித்ரசேன் மங்கராஜ் என்ற விவசாயி கூறுகிறார்.

சித்ரசேன் மங்கராஜ், பித்யாதார்புர், பைக்ராபுர், குர்தா மாவட்டம், ஒரிஸ்ஸா. – தேனீ – 27102

### கடும் வெயிலில் மாடுகள் பாதிப்படையாமலிருக்க

வெல்லம் 2 கிலோவை ஒரு பாத்திரத்தில் எடுத்து இதில் நீர் 3 லிட்டர் விட்டு ஓர் இரவு ஊற வைக்க வேண்டும். மறுநாள் காலை இதனை வடிகட்டி மாட்டிற்குத் தர வேண்டும். இதனை 2 நாட்கள் தர வேண்டும்.

–– கபாபாய் கரன்பாய், நவா, ராஜ்பிப்ளா போடட் மாவட்டம் தேனீ – 27111

### மாடுகளுக்கு மூட்டுவலி

மூட்டு வலியினால் மாடுகள் நடக்க முடியாமல் நொண்டும். இதற்கு நாட்டு கருவேல் இலை 2 கைப்பிடி அரைத்து இத்துடன் நல்லெண்ணெய், உப்பு சேர்த்து கொதிக்க விட வேண்டும். இதிலிருந்து வரும் வழவழப்பான பசை போன்ற திரவத்தை மூட்டுப் பகுதியில் தடவி துணியால் கட்டி விட வேண்டும்.

தேனீ – 27112

பச்சுபாஹி நாஞ்சிபாய்
சோளங்கி
பஹோதரா ,பவ்ளா, அகமதாபாத்

## ஜாதிக்காயில் பல வேர்ச் செடிகளை வைத்து ஒட்டு கட்டுதல்

ஜாதிக்காயில் ஒட்டு கன்றுகள் உற்பத்தி செய்யும் சமயம் பல வேர்ச் செடிகளை வைத்து கோபி என்பவர் ஒட்டு கட்டுகிறார். கேரளாவில் இடுக்கி மாவட்டத்தில் சில சமயங்கள் பலமான காற்று வீசுவதால் மரங்கள் சாயும் நிலை ஏற்படும். மரங்களுக்கு வேர்பகுதி கெட்டியாக இருப்பதற்கு ஒரு மரக்கன்றிற்கு பல செடிகளின்



வேர்பகுதியை இணைத்து ஒட்டு கன்று உருவாக்குகிறார். இதன்படி 5 அல்லது 6 காட்டு ஜாதிக்காய் கன்றுகளை உருவாக்கி குறிப்பிட்ட உயரம் வந்தாவுடன் நல்ல விளைச்சல் தரும் ஜாதிக்காய் மரக்கிளையைத் தேர்ந்தெடுத்து ஒட்டு கட்டுகிறார். (Approach grafting) . பின்னர் ஒரு மாதம் கழித்து “V” வடிவில் கட் செய்து பின்னர் மரத்திலிருந்து பிரித்து விட வேண்டும். இந்த ஒட்டுக் கன்றை நட்டு விட வேண்டும். இதில் வளரும் ஓர் கன்று ஆணி வேருக்கு பதிலாக 5 ஆணி வேர்கள் கொண்டதாக இருப்பதால் காற்று பலமாக அடித்தாலும் சாய்வதில்லை. இம்மரக்கன்றிற்கு அதீத வளர்ச்சியும் இரண்டாவது ஆண்டிலிருந்தே அதிக மகசூலை கொடுக்க ஆரம்பிக்கும்.

சி.எம். கோபி, செருகுனல் வீடு
அடிமலி அஞ்சல், இடுக்கி மாவட்டம், கேரளா

தேனீ – 27115

## மிளகு குச்சிகள் விரைவில் தழைக்க

முருங்கை இலைகளை 1/2 கிலோ எடுத்து 1/2 லிட்டர் நீரில் 12 மணி நேரம் ஊற வைக்க வேண்டும். பின் இலைகளை அரைத்த கரைசலில் மிளகு செடியின் குச்சிகளை 1/2 மணி நேரம் அடிப்பாகம் அமிழ்த்து வைக்க வேண்டும். பின்னர் குச்சிகளை நடவு செய்ய வேண்டும். 21 நாட்களில் வேர்கள் உண்டாகி தளிர்த்து விடும்.

முருங்கைக்கரைசலில் அமினோ அமிலம், சாம்பல்சத்து, சுண்ணாம்புசத்து, இரும்புசத்து, போன்றவற்றால் இயற்கை சைட்டோகைனின் என்ற வேதிப்பொருள் உருவாகி வளர்ச்சியை கூட்டும் என்று கூறப்படுகிறது.

சிமி, கிரின்ஸ், பக்கலம் அஞ்சல், கண்ணூர், கேரளா

தேனீ – 27115

## ரப்பர் தோப்பில் மிளகு கொடி பயிரிடல்

இரப்பர் மரத்தில் பால் எடுக்கப்படுவதால் இரப்பர் மரத்தைச் சுற்றி எந்த பயிரும் சாகுபடி செய்யப்படுவதில்லை. வர்கீஸ் என்பவர் ரப்பர் மரத்தில் தரை மட்டத்திலிருந்து 10 அடி விட்டு அதற்கு மேல் மிளகு கொடியை படரவிட்டுள்ளார். அதாவது 10 அடி உயர மரக்கம்பு ஊன்றி மிளகு செடியை ஏற விட வேண்டும். பின்னர் அருகிலுள்ள இரப்பர் மரத்தில் ஏற்றிவிட வேண்டும். இதனால் இரப்பருக்கு பாதிப்புமில்லை மிளகு, இரப்பரிலிருந்து 2 வெள்ளாமை எடுக்கலாம்.

வர்கீஸ், வந்தொர்குன்னெல்,
வலியதொவலா, இடுக்கி, கேரளா தேனீ – 27116

## ரப்பர் தோப்பில் காப்பி செடி பயிரிடல்

இரப்பர் மரங்களடர்ந்த தோப்பில் அதிகமாக நிழல் காணப்படும். இதனால் காப்பி செடி வெள்ளாமை நன்றாக இருக்காது. தற்சமயம் ரப்பர் பாலின் விலை சரிந்து விட்டதால் ரப்பர் தோப்பில் மாற்று பயிருக்கு முயல வேண்டிய கட்டாயம் உருவாகி உள்ளது. இராய் அந்தோணி என்ற விவசாயி கேரளா, கர்நாடாக மாநிலத்தில் பல ஊர்களுக்கு சென்று வந்து இரப்பர் தோப்பில் நிழலுக்கு தாக்குப்பிடித்து வளரும் காப்பி செடி ரகத்தைக் கொண்டு வந்து பயிர் செய்து பலன் பெற்றுள்ளார். இதனை ரப்பர் வாரியம் பாராட்டியுள்ளது.

ராய் அந்தோணி, கவலக்கட்டு
சசிமலா அஞ்சல், புல்பலி, வையநாடு, கேரளா
தேனீ – 27117

## இரம்புத்தானில் நல்ல மகசூல் எடுக்க



கொடைக்கானல், ஊட்டி பகுதியில் இரம்புத்தான் பழ மரங்கள் காணப்படுகிறது. இம்மரத்தின் பழங்கள் வெளியே சிவப்பு நிறத்துடனும் உள்ளே வெள்ளை நிற சதையும் பார்ப்பதற்கும் சுவைப்பதற்கும் இரம்மயமாகக் காணப்படும். இந்த மரங்களில் ஆண், பெண் எனத்தனித்தனியாகக் காணப்படும். குரியன் என்பவர் ஒட்டுக்கட்டிய இரம்புத்தான் மற்றும் விதைக்கன்று மூலம் நட்ட மரங்களும் தனது தோட்டத்தில் வைத்திருக்கிறார். மரங்கள் பூத்தன, காய்க்கவில்லை. ஒரு முறை தனது நண்பர் தோட்டத்தில் பெண் மரத்தின் பூக்களருகிலிருந்த ஆண் மர பூக்கள் மூலம் மகரந்தச் சேர்க்கை நடைபெற்றதைக் கவனித்தார். நண்பர் தோட்டத்தில் பழங்கள் நல்ல விளைச்சலிலிருந்ததையும் பார்த்து நண்பரின் தோட்டத்திலிலுள்ள ஆண் பூக்கள் எடுத்து வந்து ஒரு பாட்டிலில் நீர் ஊற்றி வைத்தார். இந்த பாட்டிலை தனது தோட்டத்திலுள்ள பெண் பூக்கள் அருகாமையில் கட்டி வைத்தார். தேனீக்கள் ஆண் பூக்களின் மகரந்தத்தை எடுத்து வந்து பெண் பூக்களில் விழச் செய்து மகரந்தச் சேர்க்கையை உண்டாக்கியது. இதனால் 25 வருடமான ஒரு மரத்திலிருந்து 425 கிலோ பழங்கள் கிடைத்தது. சாதாரணமாக 100 கிலோவுக்கும் குறைவாகவே பழங்கள் பிடிக்கும்.

அபிரேம்குட்டிகுரியன், கடலிகட்டி
கவில்குன்னு, கிழந்தடியூர், பலா
கோட்டயம் மாவட்டம், கேரளா
தேனீ – 27117

## மடி நோய்க்கு மூலிகை மருந்து

மதுரை மாநகருக்கு அருகே விராட்டிபத்து ஊரில் நாங்கள் 6 ஹெச்.எப். கலப்பின பசுக்கள் வைத்துள்ளோம். இதில் ஒரு மாட்டிற்கு மடி நோய் வந்து விட்டது. இதற்கு சேவா சங்கத்திற்கு சென்று என்ன மருந்து கொடுக்கலாம் என்று கேட்டு வந்தேன். மடி நோய்க்கு வேலிப்பருத்தி இலையை அரைத்து மடியில் பூசி உள்ளே சோடா உப்பு, எலுமிச்சம்பழ சாறு, வெல்லம் சேர்த்து கொடுக்க சொன்னார்கள். எங்களுக்கு வேலிப்பருத்தி இலையை அடையாளம் பார்க்க முடியவில்லை. இதனால் 4 எலுமிச்சம்பழத்தை சாறு பிழிந்து 100 கிராம் வெல்லம், 50 கிராம் சோடா உப்பு கலந்து கரைசல் தயார் செய்தோம். இதனை 2 வேளைகள் 2 நாட்கள் கொடுத்தோம். தற்பொழுது மடி நோய் அறிகுறி தென்படவில்லை.

சுரேஷ்கண்ணன்
விராட்டிபத்து
செல்: 9380746806

## புழு வைத்த புண்ணுக்கு

எங்களுடைய பண்ணையில் 2 ஹெச்.எப் மாடுகளுக்கு கால்கொழம்பு பகுதியில் புண் வந்து விட்டது. இந்த புண்ணில் புழுக்கள் குதறியிருந்தன. இதற்கு மத்தான் தைலம் தயாரித்து போட்டு பார்த்தேன். காலில் வீக்கமும் குறைந்தது புண்ணும் குணமாகி கொண்டு வருகிறது. மத்தான் தைலம் தயார் செய்வதை சேவா நிறுவனத்திடமிருந்து தெரிந்து கொண்டோம். (தேங்காய் எண்ணெய் + ஊமத்தை இலை சாறு இரண்டும் சம பங்கு எடுத்து காய்ச்சி இறக்கும் பதத்தில் சிறிது மயில் துத்தம் 5 கிராம் 500 மி.லி கரைசலுக்கு என்ற அளவில் சேர்த்து இறக்க வேண்டும்).

## முகுந்தனின் இயற்கை மாட்டுப் பண்ணை

திரு. முகுந்தன் செங்கல்பட்டில் இயற்கை விவசாயப்பண்ணையை நடத்தி வருகிறார். வாழ்க்கையில் பிற்பகுதியில் விவசாயத்தில் இறங்கி இருந்தாலும் மிகுந்த ஆர்வத்துடன் பல புதுமைகளை புகுத்தி உற்சாகத்துடன் வேளாண்மையில் ஈடுபட்டுள்ளார். 2003 ல் தர்பார்கர் என்று நாட்டு ரக பசுக்களை இராஜஸ்தானிலிருந்து தருவித்து பண்ணையும் வைத்துள்ளார்.



இவர் சுமார் 20 ஏக்கரில் கரும்பு, நெல், தீவனப்பயிர் சாகுபடி செய்து வருகிறார். இவரது கடலை சாகுபடி விதைப்பு முறைக்கு தேசிய கண்டுபிடிப்பு அறக்கட்டளையின் விருது பெற்றுள்ளார். இவரது குடும்பத்தில் பிள்ளைகள் வெளி நாட்டிலும், சென்னையிலும் இருந்தாலும் மனைவி காலமானபின் தனித்திருந்து வைராக்கியத்துடன் வேளாண்மையில் புது புது உத்திகளை கடைபிடித்து மற்றவர்களுக்கும் பகிர்ந்து கொள்கிறார். இயற்கை முறையில் பாரம்பரிய நெல் ரகங்களை விளைவித்து நண்பர்களுக்கு கொடுத்து வருகிறார். தற்சமயம் நித்தமும் 100 லிட்டர் பால் கறந்து இயற்கை நாட்டு மாட்டு பாலாகவும், பாலாடைகட்டி, நெய்யையும் கொடுத்து வருகிறார்.

### கரும்பில் 7 அடி இடைவெளி

தற்பொழுது வேலையாட்கள் பிரச்சணையால் கரும்பில் 7 அடி இடைவெளியில் 2 வரிசையில் சாலுக்கு கரும்பு கரணைகள் நடுகிறார். கரணைகளுக்கு நடுவில் சாணம் கோழியெரு கலந்து இடுகிறார். 7 அடி இடைவெளியில் டிராக்டர் மூலம் உழுது கிளரி விடுகிறார். கரும்புக்கு தெளிப்பான் மூலம் நீர் பாய்ச்ச ஏற்பாடு செய்து வருகிறார்.

### மாடு மூலம் இயங்கும் பல்நோக்கு இயந்திரம்



இரண்டு மாடுகளை வைத்து பாத்திபோட, வரப்புகட்ட, களையெடுக்க ஒரு இயந்திரத்தை வடிவமைத்து வருகிறார். இன்னும் சில நாட்களில் இயக்க உள்ளார். இதை பயன்படுத்தும் சமயம் வேலையாட்கள் உதவியின்றி, மாடுகளை வைத்தே இயந்திரத்தை ஒரே நபர் இயக்கலாம். பல ஆட்கள் செய்யும் வேலையை ஒரே ஆள் செய்து முடிக்கலாம். இதன் விலை ரூ. 14000 மட்டும் தான் ஆகும்.

### நாட்டு மாட்டுப் பண்ணை

2003ல் தனது நண்பர் மணி சேகர் மூலம் தர்பார்க்கர் என்ற ஜாதிமாட்டை தருவித்து கடந்த 13 ஆண்டுகளாக

பண்ணை நடத்தி வருகிறார். மொத்தம் 75 மாடுகளில் 20 மாடுகள் கறவையில் உள்ளன. ஒரு மாட்டிலிருந்து சராசரியாக 7–10 லிட்டர் பால் கிடைக்கிறது. சில மாடுகள் 15 லிட்டர் வரை தருகின்றன. இந்த மாடுகள் வெள்ளை நிறத்தில் பார்ப்பதற்கு லட்சணமாகக்காணப்படும். காதுகள் பெரிது. 7–8 ஈத்து ஈனும். தனது தோட்டத்திலேயே மேய்க்க விடுகிறார். பசுந்தீவனப்புல் போட்டும் கொடுக்கிறார். நித்தமும் 100 லிட்டர் பால் விநியோகம். லிட்டர் ரூ 50 க்கு நண்பர்களுக்கு கொடுக்கிறார். காளை மூலம் இனப்பெருக்கம் செய்வதால் சினைபிடிக்காத பிரச்சனை இல்லை. தமிழ்நாட்டிற்கு தர்பார்க்கர் ஜாதி ரகத்தை பரப்ப அரசும், தண்ணார்வ உறுப்பினர்களும் முன் வர வேண்டும். என கூறுகிறார். வெள்ளிக்கிழமை மாடுகளை குளிப்பாட்டி குங்குமம் வைத்து கும்பிடுகிறார்.

3 ஏக்கரில் மாதிரியாக நடுவில் 80’x32’ அடி இடத்தில் கொட்டகை வைத்து சுற்றிலும் காலியிடம் பின் வேலி என்ற அமைப்பை உருவாக்கி வருகிறார். இதனால் இயற்கை சூழலில் மாடுகள் தன்னிஷ்டப்படி வெளியே மேய நீர் குடிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இவரின் உத்திகள் ஏற்கனவே நம் வழி வேளாண்மை பருவம் 16, இதழ் 2ல் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

முகுந்தன்
92, இராஜாஜி தெரு, செங்கல்பட்டு
செல்: 9382337818, 8883727588

## பசுக்களில் செயற்கை கருவூட்டம்



திரு. தாமோதரன் நாட்டு பசு இரகங்களை உருவாக்க பசுக்களில் செயற்கை கருவூட்ட முறையை பின்பற்றி வருகிறார். சினை ஊசிபோடுவதற்கு தர்பார்கர், ரெட்சிந்தி, சாஹிவால், கிர், காயகரேஜ், ராட்டி போன்ற நாட்டு மாட்டு விந்துக்களை பயன்படுத்துகிறார். தான் ஊசி போட்ட மாடுகளில் 100க்கு 73 மாடுகள் விகிதத்தில் சினை பிடிப்பதாக கூறுகிறார். இவர் கடைபிடிக்கும் உத்திகள் பின்வருமாறு: இவர் மாதம் 200 மாடுகளுக்கு ஊசி போடுகிறார். சினைக்கு போட்ட மாடுகளுக்கு கம்பு, எள்ளுப்பிண்ணாக்கு, சத்துணவுமாவு, கரும்பு சோகை, சாதம் போடுதல் கூடாது. சினைக்கு வர ஹீட்டுக்கு வராத மாடுகளுக்கு முளைக்கட்டிய பயிறுகளை 10 நாட்களுக்கு தர வேண்டும், பிரஜனா என்ற மூலிகை கேப்சூல் கொடுக்கலாம். இந்த மாத்திரையை 3 நாட்கள் காலையில் கொடுத்து வந்தால் 15 நாட்களில் ஹீட்டுக்கு வந்து விடும். சினை தங்குவதற்கு மருதாணி இலையை 2 கைப்பிடி அரைத்து உள்ளே தர வேண்டும்.

சினை ஊசி போடும் போதும் சினை ஊசி ஸ்டராவை லிக்கியுட் நைட்ரஜன் கன்டெய்னரிலிருந்து எடுத்து சுடு தண்ணீரில் சிறிது நேரம் வைக்கச் சொல்கிறார்கள். இதை கடைபிடிக்காமல் ஐஸ்பெட்டியில் வைத்து பின்னர் சாதாரண வெப்ப நிலையிலேயே (room temperature) சினை ஊசி போட்டு வருகிறேன். சினை ஊசி போடும் சமயம் ஒரு தடவை கருவறையில் ஒரு பகுதிக்கும் மறு ஊசியை அடுத்த அறையிலும் அதாவது ஒரே மாட்டிற்கு இரு முறை 2 ஊசி போடுதல் வேண்டும். இதனால் சினை பிடிப்பது உறுதியாகும் எனக் கூறுகிறார். 2 ஊசி போட ரூ. 200 வசூல் செய்கிறார்.

இ. தாமோதரன்
11 அலமேலு மங்காபுரம்
சிங்கபெருமாள் கோவில்
காஞ்சிபுரம் மாவட்டம் – 603204, செல் : 9384621438

## மானாவாரியில் மலைவேம்பு சாகுபடி



மலைவேம்பு அதிவேகமாக வளர்ந்து மகசூல் தரும் மரமாகும். இம்மரம் பொதுவாக நீர் பாசனம் உள்ள பகுதியிலும் செம்மண் பூமியிலும் மிதமான தட்பவெப்ப பகுதியிலும் செழித்து வளரும். மதுரை மாவட்டத்தில்

கல்லுப்பட்டி கரிசல் பூமியில் திரு. ராஜகோபால் (85) 5 ஆண்டுகளுக்கு முன்னர் மலைவேம்பு கன்றுகளை 10 ஏக்கர் நிலத்தில் நட்டுள்ளார். 15x12 அடி இடைவெளியில் மரங்கள் நடப்பட்டுள்ளன. ஆரம்ப காலத்தில் நடவு செய்த சமயம் மட்டும் நீர் பாய்ச்சியுள்ளார். பின்னர் நீர் பாசனம் செய்யவில்லை. மரங்கள் சுமார் 20 அடிக்கு மேலாக வளர்ந்துள்ளன. இன்னும் சில வருடங்களில் பிளைவுட்டுக்காக இதனை அறுவடை செய்யலாம். ஒரு டன் ரூ. 3,000 க்கு வாங்கி கொள்கின்றனர். மரங்களுக்கு ஊடு பயிராக சீத்தா, முள்சீத்தா (புற்று நோய்க்கு பயன்படுத்தப்படும் மரம்), நோனி, ஆவாரம், போன்ற செடிகளை நட்டுள்ளார். நோனி செடி வருடம் முழுவதும் காய்க்கிறது. நோனி பழங்களிலிருந்து சாறு எடுத்து ஜூஸ்ஸாக விற்பனை செய்கிறார்.



நோனி பழங்களை அறுவடை செய்து உலர்த்தி காபி வடிகட்டும் பில்டரில் போட்டு விடுகிறார். பின்னர் இதை மூடி விட வேண்டும். இந்த பில்டரில் நோனி பழத்தினுடைய சாறு சொட்டு சொட்டாக சில தினங்களில் வடிந்து விடும். இதிலிருந்து கிடைத்த சாறை தனியாக பாட்டிலில் போட்டு நோனி ஜூஸ் லிட்டர் ரூ. 400 க்கு விற்பனை செய்கிறார். இந்த நோனி பழத்தின் ஜூஸ் மகிமையை அறிந்தவர்கள் புற்று நோய், இருதய கோளாறு, சர்க்கரை, மூட்டுவலி போன்ற பல வியாதிகளுக்கும் பயன்படுத்துகின்றனர். இதனை நித்தமும் 15 மி.லி சாப்பிட்டு வர வேண்டும்.

மலைவேம்பு தவிர பீநாரிசங்கு மரங்கள் 10 ஏக்கரில் நட்டுள்ளார். இதுவும் நடவு செய்யும் சமயம் மாத்திரம் நீர் விட்டு பின்னர் மானாவாரியாக வளர விட்டுள்ளார். இதன் வளர்ச்சி கரிசல்பூமியில் நன்றாக உள்ளது.

மலைவேம்பு, பீநாரிசங்கு கன்றுகளை ஆடு, மாடுகள் கடிக்காததால் வளர்ச்சியில் எந்த பாதிப்புமில்லை. ஏக்கருக்கு 200 மரங்கள் நட்டுள்ளார்.

தனது 85 வயதிலும் ஆர்வத்துடன் மானாவாரி நிலத்தில் வறட்சி தாங்கும் மரங்களை நட்டு பராமரித்து வருகிறார். இவர் டி.கல்லுப்பட்டி காந்தி நிக்கேதன் ஆசிரம பள்ளியில் தமிழ் ஆசிரியராக பணியாற்றி ஓய்வு பெற்றிருந்தாலும் அயராது உழைத்து வருகிறார்.

இராஜகோபால்
அய்யனார் இல்லம்
ராம் நகர் 2 வது தெரு
டி.கல்லுப்பட்டி – 625702
செல்– 9842175940

## அடிமட்ட கண்டுபிடிப்பாளர்கள் சங்கத்தின் 16 வது ஆண்டு பொதுக்குழு கூட்டம்

அடிமட்ட கண்டுபிடிப்பாளர்கள் சங்கத்தின் 16 வது பொதுக்குழு கூட்டம் 7.8.2016 ம் தேதி ஞாயிற்று கிழமை புளியங்குடி, அந்தோனிசாமி தோட்டத்தில் காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை நடைபெற்றது. கூட்டத்தில் சங்க உறுப்பினர்கள் 37 பேர் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் இயற்கை முறையில் கரும்பு சாகுபடி, சூரிய ஆற்றல் சைக்கிள், களை எடுக்கும் கருவி, மூலிகை செடிகள் அடையாளம் பார்த்தல் போன்றவை செயல் விளக்கமாக கூறப்பட்டது.



இயற்கை வைத்திய முறைகள், நோனி பழ சாகுபடி, எலுமிச்சை, சிவப்பு சந்தனம் சாகுபடி பற்றி உறுப்பினர்கள் பேசினார்கள். இந்த நிகழ்ச்சியை புளியங்குடி விவசாய சங்கமும், சேவா நிறுவனமும் ஏற்பாடு செய்திருந்தன.

வி. அந்தோணிசாமி
53 ஏ, மேற்கு ரத வீதி
சிந்தாமணி, புளியங்குடி – 627855
திருநெல்வேலி மாவட்டம்
செல்: 9443582076

## கொத்தமல்லியும் மாட்டு வைத்யமும்

நான் எனது மருத்துவமனைக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தேன். எனது தொலைபேசியில் ஓர் அழைப்பு. ஒரு பதட்டமான குரல், சார், நான் ராமபுரத்திலிருந்து திம்மையா பேசுறேன். டாக்டர் எனது பசுவின் வயிறு திடீரென்று பொருமிக் கொண்டது. வயிறு உருண்டு திரண்டு உள்ளது. அதன் வயிற்றில் அதிகப்படியான காற்று இருப்பது போல் உள்ளது. தீவனம் எதுவும் தின்பதில்லை. வேகமாக வந்து என் பசுவைக் காப்பாற்றுங்கள் சார்.

இதைக் கேட்டதும் நான் நீண்ட பெருமூச்சு விட்டேன். திம்மையா எனது பழைய வாடிக்கையாளர். கால்நடைகளின் மீது விருப்பமுள்ளவர். அன்றைய தினத்தில் எனக்கு நேரில் சென்று கவனிக்க வேண்டிய அழைப்புகள் பல இருந்தன. இவரது இருப்பிடம் 25 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கிறது. மேலும் இவரது பசு நின்று கொண்டுள்ளது. அசை போடவில்லை. அடிவயிறு நிசப்தமாக இருக்கிறது. சுவாசம் விடுவதும் சீராக உள்ளது. மூச்சுத் திணறல் இல்லை. நேற்று முழுவதும் திறந்த வெளியில் புல் மேய்ந்துள்ளது. இத்தனை தகவல்களையும் கேட்டறிந்த பின் ஒரு தீர்மானத்திற்கு வந்தேன். இது ஒன்றும் அபாயகரமான நிலை இல்லை. துளிர்த்து வரும் புல்லை மேய்ந்து வரும் கால்நடைகளுக்கு இது போல் ஏற்படுவது இயல்புதான். அந்த கிராமத்தில் மருந்துக் கடைகள் எதுவும் இல்லை என்பதையும் நான் அறிவேன். எனவே இப்போதைக்கு கைக்கொடுக்கக் கூடியது கை மருந்துதான். வீட்டில் உள்ள பெருங்காயத்தில் ஒரு நெல்லிக் காய் அளவு எடுத்து ஒரு லிட்டர் அளவுள்ள மோரில் கலக்கி புகட்டிவிடச் சொன்னேன். ஒரு மணி நேரம் கழிந்தபின் நிலைமை எப்படி உள்ளது என்பதைக் கூறச் சொன்னேன். இரண்டு மணி நேரங்கழித்து அந்த நல்ல தகவல் வந்தது. பசு இயல்பு நிலைக்கு வந்து விட்டது. இப்போது தீவனம் உட்கொள்கிறது என்ற செய்தியை மகிழ்வுடன் திம்மையா கூறினார்.

இந்த நிகழ்ச்சியைக் கூறக்காரணம் மிருகங்களுக்கு வரும் பிரச்சனைகளுக்கு வீட்டில் உள்ள அரசெலவுப் பொருட்களை வைத்தே குணப்படுத்தி விடலாம். இவை பல்வேறு விதமான நோய்களையும் பக்க விளைவுகள் இல்லாமல் சரி செய்து விடும். நவீன மருத்துவ முறைகள் வருவதற்கு முன்பே கிராமப்பகுதிகளில் நாட்டு வைத்தியம் தான் கால்நடைகளைக் காத்து வந்துள்ளது. காலங்கள் கடந்தாலும் அந்த பழைய வைத்திய முறைகள் முற்றிலும் அழியாமல் இன்றளவில் சிலரால் பயன்படுத்தப்பட்டே வருகிறது என்பது கவனிக்கத்தக்கது.

வீட்டிலுள்ள பொருட்களை வைத்தே கால்நடைகளுக்கு எளிமையான முறையில் வைத்தியம் செய்ய முடியும். கால்நடைகளுக்கான வைத்திய முறைகள் மனிதர்களுக்கான வைத்தியம் போல் தொகுக்கப்படவில்லை. எனது பதினைந்து வருட காலகால்நடை வைத்திய அனுபவத்தில் எனக்குத் தெரிந்த நாட்டு வைத்தியங்களைப் பயன்படுத்தி வருகின்றேன். இவைகள் யாவும் விவசாயிகளிடமிருந்து கற்றறிந்தவை. இவற்றைப் பயன்படுத்தி கால்நடைகளின் நோய்கள் அகற்றப்பட்டு அவற்றின் ஆரோக்கியமும் காக்கப்படுகிறது எனது அனுபவ உண்மையாகும். இவற்றில் மேலும் கவனம் செலுத்தி ஆய்வு செய்து அவற்றைப் பதிவு செய்து கொண்டேன். மேலும் நடைமுறை வைத்திய முறைகளையும் தேடிப்பிடித்துக் கற்றறிந்தேன். இறுதியில் பதிவு செய்யப்பட்டவற்றைத் தொகுத்துப் பார்க்கும் போது அவற்றில் முக்கியமான சேர்மானங்களாக இருந்தவை வாசனை திரவியங்கள் ஆகும்.

கால்நடை வைத்தியத்தில் காய்ச்சல். அஜீரணம், பொருமல், போன்றவற்றிற்கு வாசனை திரவியங்கள் உதவிக்கரம் நீட்டுகிறது. மேலும் இது போன்ற கை மருந்துகளால் நோய் ஓரிரு நாட்களில் குணமாகவில்லையானால் கால்நடை மருத்துவரை அணுக வேண்டும் என்பதும் கவனிக்கத்தக்கதாகும்.

கால்நடைகளுக்கு வரும் பிரச்சனைகள் முக்கியமானவற்றிற்கு வாசனை திரவியங்கள் பயன்படுத்திய சில செய்முறைகளை வரிசைப்படுத்தியுள்ளேன். இவை சிக்கனமான, எளிதான, வீட்டில் உள்ள பொருட்களை வைத்தே தயாரிக்கக் கூடியதாகும்.

### கொத்தமல்லி

கொத்தமல்லியின் மருத்துவ குணங்களில் முக்கியமானது குடலில் உள்ள வாயுவை அகற்றுவது. பாக்டீரியாக்களை எதிர்ப்பது, வலியை மட்டுப்படுத்துவது. பூஞ்சாணத்தை எதிர்ப்பது போன்றவையாகும். இனி கொத்தமல்லியைப் பயன்படுத்தியுள்ள சில செய்முறைகளைக் காணலாம்.

### காய்ச்சலுக்கு

கால்நடைகளுக்கு காய்ச்சல் உள்ளது என்பதை அறிந்து கொள்ளும் முறைகள்: வால் மற்றும் செவிகளின் அடிப்பகுதியில் சூடு இருக்கும், பால் சுரக்கும் போது பாலில் பரவும் வெப்பம் இவற்றின் மூலம் பசுக்களுக்கு

காய்ச்சல் இருக்கிறது என்பதை அறிந்த கொள்ளலாம். காய்ச்சல் உள்ள மாடு நடக்க மறுக்கும். பின்பக்கம் கூனி இருக்கும். தலை மற்றும் செவி கீழ் நோக்கிக் கவிழ்ந்திருக்கும். தீவனம் தின்னாமல் இருக்கும். கரக்கும் பாலின் அளவு குறைவும்.

**மருத்துவம்**

தேவையான பொருட்கள் : கொத்தமல்லி – 10 தேக்கரண்டி, வசம்பு, மிளகு, கிராம்பு, கற்பூரம் ஒவ்வொன்றும் இரண்டு தேக்கரண்டி ஜாதிக்காய் 1, வெற்றிலை 25 எண்ணிக்கை, வெல்லம் 10 தேக்கரண்டி. இவற்றை ஒன்று சேர்த்து அரைத்து அரைக் கப் ஆட்டுப்பாலில் கலந்து வாய்வழியே ஊற்றி விடவேண்டும். தினமும் ஒரு வேளை கொடுத்தால் போதும், கய்ச்சல் தீரும்.

**கழிச்சலுக்கு**

கொத்தமல்லி, சீரகம் இரண்டையும் அரைக் கைப்பிடி எடுத்து சுமார் 5 மணி நேரம் தண்ணீரில் ஊற வைக்க வேண்டும். பின் இதனை வடிகட்டி அத்துடன் சிறிது வெல்லம் சேர்த்து பாதிக்கப்பட்ட மாடுகளுக்கு தினமும் இரண்டு வேளை வீதம் நோய் குணமாகும் வரை கொடுக்க வேண்டும்.

**கண் சிவத்தலுக்கு**

மாடுகளின் கண்கள் சிவந்து எரிச்சலூட்டுவது போல் இருந்தால் ஒரு நாள் இரவு முழுவதும் கொத்தமல்லியை தண்ணீரில் ஊற வைத்து அதைப் புகட்ட வேண்டும். ஒரு நாளைக்கு இருமுறை வீதம் குணமாகும் வரை தரலாம்.

**காணைநோய்க்கு**

காணை நோய் அல்லது கோமாரி நோய் (FMD) இந்த நோய் வராமல் தடுக்க அல்லது வந்த பின்னர் கட்டுப்படுத்த கொத்தமல்லி இலை மற்றும் துளசியை அரைத்து கொடுத்தால் இந்த நோய் மட்டுப்படும் என்பது பாரம்பரிய கை வைத்தியமாகும்.

இந்த நோய் இளங்கன்றுகளுக்கு வந்தால் கொத்தமல்லிச் செடியை வேறுடன் பறித்து அரைத்துக் கொடுத்தால் நோய் குறையும். அதே போல் வயதான மாடுகளுக்கு வந்தால் ஒரு கைப்பிடி அளவு கொத்தமல்லி இலையை கடலை எண்ணெய்யில் ஊற வைத்து அதனை நான்கு பாகமாகப் பிரித்து ஒவ்வொரு பாகத்தையும் ஒரு நாளில் நான்கு முறை வீதம் ஒரு வாரத்திற்குத் தர வேண்டும்.

**காணை நோய் வந்த பிறகு**

ஒரு வேளை நாட்டு மருந்துகள் மூலமாக காணை நோய் விலகி விட்டாலும் அதன் தாக்கம் ஆறு மாத காலத்திற்கு நீடித்திருக்கும். இது கருவுறாமை, ஆடுகளில் ரோமம் நிறம் மாறுதல், பாலின் அளவு குறைவு கழிச்சல் போன்ற அறிகுறிகள் தோன்றும். இதற்கு ஐந்து தேக்கரண்டி கொத்தமல்லி விதை, மூன்று தேக்கரண்டி இஞ்சி, அரைக்கப் வெல்லம் ஆகியவற்றை ஒரு லிட்டர் தண்ணீரில் கொதிக்க வைக்க வேண்டும். இந்த கஷாயத்தை ஒரு நாளைக்கு ஒரு முறை வீதம் ஒரு வாரத்திற்குத் தர வேண்டும். இதனை ஒவ்வொரு மாதமும் தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டும்.

**பால் சுரப்பை அதிகரிக்க**

கொத்தமல்லி –இரண்டு தேக்கரண்டி, சீரகம் – தலா இரண்டு தேக்கரண்டி, சதாவரிவேர்– 100 கிராம். இவற்றை அரைத்து கால்நடைத் தீவனத்துடன் ஒரு நாளைக்கு ஒரு முறை வீதம் 10 நாட்களுக்குத் தர வேண்டும்.

**உடல் வெப்பம் குறைய**

கொத்தமல்லி விதை – இரண்டு தேக்கரண்டி, கடுகு– இரண்டு தேக்கரண்டி, இஞ்சி, சீரகம் ஆகியவற்றை பொடித்து அரைத்து ஒரு லிட்டர் அரிசி கழுவிய நீரில் கலந்து ஒரு நாளைக்கு இரண்டு முறை வீதம் இரண்டு நாட்களுக்குத் தர வேண்டும்.

**நாய்களுக்கு ஏற்படும் வாந்தி**

இரண்டு தேக்கரண்டி கொத்தமல்லி விதைகளை ஒரு கப் தண்ணீரில் இரவு முழுவதும் ஊற வைக்க வேண்டும். இதனை வடிகட்டி கிடைக்கும் நீரை வெல்லம் சேர்த்து நாய்களுக்கு ஒரு மணி நேர இடைவெளியில் கொடுத்தால் வாந்தி எடுப்பது கட்டுப்படும்.

Dr. Ganesh Hegde Neelesara
Animal Scientist
Sirsi, Karnataka
Mob: 09448995595
Email: g.hegdevet@gmail.com

––நன்றி : ஸ்பைஸ் இந்தியா –செப்டம்பர் 2016

## வாசகர் வட்டம்

**ஜெய் ஸ்ரீராம் நெல்ரகம்**

நம்வழிவேளாண்மை பருவம் 25 இதழ் 4 ல் டி.ஆர்.கே புதிய நெல்ரகம் பற்றி எழுதியிருந்தீர்கள். இந்த நெல் ‘‘ஜெய் ஸ்ரீராம்’’ நெல்ரகமாக விற்கப்படுகிறது. ஏனென்றால் சென்ற வருடம் ஜெய்ஸ்ரீராம் ரகத்தை 5 ஏக்கரில் பயிர் செய்தேன். இதுவும் சன்னரகம். வயது 130 நாட்கள். ஏக்கருக்கு 35 மூட்டை (2 டன்) நெல் கிடைத்தது. இந்த பயிர் ரகம் சாயாது. நோய் தாக்குதல் கிடையாது. பிரியாணிக்கு ஏற்ற ரகம். புழுங்கல் அரிசி

வேக நேரமாகும். பச்சை அரிசியாக சமைத்தால் நல்ல ருசி. குஸ்கா, வெஜிடேபிள் பிரியாணிக்கு உகந்தது. இந்த அரிசியை சமைத்து உண்டவர்கள் இதன் சுவைக்கு அடிமையாகிவிடுவர்.

ஆர்.எம். தர்மராஜன்
த/பெ. ஏ.ஆர். மாணிக்கம்
5/32, பி.டி.ஆர். இல்லம்
அயிலபேட்டை
கோப்பு அஞ்சல், திருச்சிராபள்ளி–639 103
செல்–9344177662

## பஞ்ச ஔஷதா

''பஞ்ச ஔஷதா'' என்ற இயற்கை பானத்தை நான் பலருக்கு கொடுத்து வருகிறேன். இதை காலையில் அருந்தி வருபவர்களுக்கு இருதயக்கோளாறு உயர்ந்த இரத்த அழுத்தம் சர்க்கரை நோய் போன்றவற்றிலிருந்து குணமடையலாம்.

தயாரிக்கும் முறை : இஞ்சிசாறு 1 லிட்டர், எலுமிச்சம்பழச்சாறு 1 லிட்டர், வெள்ளைப்பூண்டு சாறு 1 லிட்டர், ஆப்பிள்வினிகர் 1 லிட்டர் மேற்கண்டவற்றை அடுப்பில் ஏற்றி 3ல் 1 பங்காக சுண்ட வைத்து ஆறவைத்து கண்ணாடி பாட்டிலில் பத்திரப்படுத்தி வைக்க வேண்டும். இந்த பானத்தை 15 மி.லி அளவு எடுத்து அரை டம்ளர் நீரில் கலந்து தொடர்ந்து 90 நாட்கள் அருந்தி வர வேண்டும். இதனை பல நபர்களுக்கு கொடுத்து பார்த்து நல்ல பலன் கிடைத்ததை கூறியுள்ளார்கள்.

பி. கோமதிநாயகம்
18,பஜனை மடம் தெரு,
டி.என். புதுக்குடி
புளியங்குடி
போன்: 04636–233235

## கமலபதியின் சாண எரிவாயு கலனுக்கு சாணி கலவை கலக்கும் கருவி

நாகப்பட்டிணம் மாவட்டம் சங்கமங்கலம் கிராமத்தைத் சேர்ந்தவர். திரு.கே.எம். கமலபதி. இவருக்கு வயது 52 இவர் 6 ம் வகுப்பு வரை படித்துள்ளார். இவரது தந்தை லேத் ஒர்க்ஷாப் நடத்தி வந்தார். தனது 12 ம் வயது முதலே லேத் ஒர்க் ஷாப்பில் தனது படிப்பை நிறுத்தி விட்டு வேலை செய்ய ஆரம்பித்துள்ளார்.

### சாண எரிவாயு கலவை கலக்கும் கருவி

ஒரு விவசாயி வலிவலம் பண்ணையில் சாண எரிவு கலன் வைத்து இருந்தனர். சாண எரிவாயு கலவை கலக்குவதற்கு தனியாக ஆள் தேவைப்படுகிறது. இக் கலவை கலக்குவதற்கு ஒரு கருவி செய்து கொடுக்குமாறு கேட்டார். அதற்காக ஒரு கருவியை வடிவமைத்து கொடுத்தார். இம்முறையில் மாட்டுக்கொட்டகை மாட்டு மூத்திரம் தானாக வடித்து சாளரம் வழியாக ஒரு தொட்டிக்குள் விழுமாறு மாட்டுக் கொட்டகை அமைக்கப்பட்டுள்ளது. இங்கு மாட்டு சாணம், மூத்திரம் ஒரு பலகை கொண்டு வழித்து தள்ளி கொண்டு போய் அந்த தொட்டியில் விழ செய்து விடுகிறார்கள். பின்பு சாணம் மற்றும் மாட்டு மூத்திரத்தை நன்றாக இக் கருவி கொண்டு இரண்டு அல்லது மூன்று முறை மட்டுமே கலக்கி விடுகிறார்கள். அப்படி செய்வதன் மூலம் சாணம் மாட்டு மூத்திரம் நன்றாக கலக்கப்பட்டு நேராக சாண எரிவாயு டிரம்முக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. இக்கருவியில் தொட்டியில் இரண்டு தட்டுகள் பொறுத்தப்பட்டு ஒரு கைப்பிடியின் மூலம் இயக்கப்படுகிறது. இம்முறையில் சாணம் மற்றும் மூத்திரம் முழுவதும் சாண எரிவாயுவுக்களாக பயன்படுத்தப்படுகிறது. சாணத்தை கரைப்பதற்காக தனியாக தண்ணீர் தேவையில்லை.

கே.எம். கமலபதி
த/பெ. கே. முருகையன்
1/27, கீழ தெரு
சங்கமங்கலம்
சிக்கல் அஞ்சல்
நாகப்பட்டிணம் மாவட்டம்

## மரவள்ளிமாவு பாயாசம்

மரவள்ளி கிழங்கை தேவையான அளவு பிடுங்கி நறுக்கி மேல் மண்ணை சுத்தம் செய்ய வேண்டும். மேல் தோலினை கையால் தொளித்து சுத்தம் செய்து அடி வேர் இருந்தால் வெட்டி விட்டு அதை 1 மி.மி முதல் 11/2மி.மி தடிமன் இருக்குமாறு சிப்ஸ் பீஸ் கட்டர் மிஷினில் இட்டு சிப்ஸ்களாக வெட்ட வேண்டும். அதை வசதியிருந்தால் சோலார் டிரையரில் உலர்த்தி கொள்ளலாம். இல்லா விட்டால் சற்றே பரவலாக சிமெண்ட் கலத்தில் போட்டு உலர்த்தினால் அது மாலையில் நன்றாக காய்ந்து விடும். இந்த சிப்சை மாவு மில்லில் இட்டு அரைத்தால் சிப்ஸ் மாவு ரெடியாகிவிடும்.

**பாயாசம் செய்யும் முறை**

ஒரு பாத்திரத்தில் மரவள்ளி சிப்ஸ் மாவு 150 கிராம் எடுத்து 1லிட்டர் தண்ணீர் விட்டு கொதிக்க வைத்து கொள்ள வேண்டும். அதில் மாவை சிறிது தண்ணீரில் கரைத்து அதில் ஊற்றி சிறிது நேரம் கலக்கி கொள்ள வேண்டும். இதில் திராட்சை, முந்திரி சிறிது நெய்யில் வறுத்து போட வேண்டும். பின்பு சிறிது ஏலக்காய்தூள் போட வேண்டும். மேலும் சுவை கூட்ட கொஞ்சம் சேமியா போட வேண்டும். தேங்காய் துருவலை நெய் விட்டு அதையும் இதனுடன் போட வேண்டும். தேவையான அளவு சக்கரை சேர்த்து கொள்ளலாம். தேவையான அளவு கொதிக்க வைத்த பால் சேர்க்கவும். முடிந்தால் 1 ஸ்பூன் நெய்யில் மாவை வருத்து கொள்ளலாம்.

**மா வத்தல்**

மாவத்தலை கழுவி நாட்டு சக்கரை, புளியில் ஊற வைத்து ஊறுகாய் செய்தால் கெடாமல் சுவையாய் இருக்கும்.

ஆர். தன்ராஜ்
பெரியப்புகாடு
கல்குறிச்சி அஞ்சல்
பேளுகுறிச்சி வழி, நாமக்கல் – 637 402
செல்: 9443469132

## மைடா இரட்டை ரகம் நெல் சாகுபடி

ஒடிஸ்ஸாவில் கோராபுட் பகுதில் ''கடபா'' என்ற மலை ஜாதி மக்கள் நெல் பயிரிடும் சமயம் இரண்டு நெல் ரகங்களை சேர்த்தே ஒரே சமயத்தில் விதைப்பர். மலைச்சரிவு கீழ்பகுதியில் பருவமழை முடிந்ததும் தண்ணீர் வடிந்து இருக்கும். மார்ச் மாதத்தில் ஏறக்குறைய முழுவதும் வடியும் தருவாயில் முளைக்கட்டிய நெல்விதைகளை விதைப்பர். விதையளவு 1 குவிண்டால் / ஹெக்டர், குறுகியகாலப்பயிர் 90–100 நாள் காலம் கொண்ட ''சிப்டி'' என்ற குறுகிய கால ரகத்தையும் 280–300 நாள் காலம் கொண்ட ''கேரண்டி'' என்ற நீண்ட காலத்தையும் சேர்த்து விதைப்பர். ஜுன் – ஜுலையில் சிப்டி அறுவடைக்கு வரும். டிசம்பர் – ஜனவரியில் கேரண்டி அறுவடை செய்யப்படும். ஜுன்– ஜுலையில் சிப்டி அறுவடை செய்யப்படும் சமயம் கேரண்டியை ஒடித்து விடுவர். இது புது சிம்பு எடுத்து வயலில் நீர் மட்டம் கூட கூட உயரமாக வளர்ந்து கொண்டே செல்லும். செப்டம்பர் – அக்டோபரில் கூட இதன் தாளை மீண்டும் ஒடித்து விடுவர். கடைசியாக டிசம்பர் கடைசியில் ஜனவரியில் அறுவடை செய்வர். சிப்டியில் ஏக்கருக்கு 3 மூட்டையும் கேரண்டியில் 12 மூடையும் அறுவடை செய்வர். ஜுன் –ஜுலையில் அறுவடை செய்யப்படும் நெல் உணவிற்கு மட்டும் பயன்படுத்துவர்.

இந்தப்பகுதியிலிருந்துதான் காட்டுத்தாவரமாக இருந்த நெல்லை முதன் முதலாக நிலத்தில் பயிர் செய்யப்பட்டு வேளாண்மையில் இடம் பிடித்தது. இந்த வனப்பகுதி இராமர், சீதை வனவாசம் புரிந்த இடமாக நம்பப்படுகிறது.

நன்றி: நெல் 29–30 , ஜனவரி – ஏப்ரல் 2016

## கால்நடை மூலிகை வைத்திய முகாம்

ஆகஸ்டு மாதம் 11ம் தேதி மேலக்கரந்தை கிராமத்தில் திரு. மேதையன் வெம்பூர் செம்மறி ஆட்டு கிடையில் நீலநாக்கு நோய் மற்றும் காணை நோய் வராமல் தடுப்பதற்காக சோற்றுக்கற்றாழை மற்றும் மூலிகை குடற்புழு மருந்து கொடுக்கும் முகாம் நடைபெற்றது. இம்முகாமில் அழகுமலை சேவா, மேதையன் கருப்பாயி மற்றும் முத்து கணேசன் ஆகியோர் பங்கு பெற்றனர். இதில் சுமார் 80 செம்மறி ஆடுகள் மற்றும் 10 வெள்ளாடுகளுக்கு மூலிகை மருந்து கொடுக்கப்பட்டது. மருந்து கொடுக்கும் சமயத்தில் ஒரு சில ஆடுகளுக்கு மூக்கு சளி தொந்தரவு இருப்பது கண்டறியப்பட்டது.

அதே நாளில் மாலை நேரத்தில் திரு.பொன்ராம் அவர்களின் செம்மறியாட்டு கிடையில் மூலிகை மருந்து கொடுக்கப்பட்டது. இதில் பொன்ராமின் மகன் கணேசன் மற்றும் மேடையன் ஆகியோர் முகாமில் பங்கு கொண்டனர். சுமார் 100 செம்மறி ஆடுகளுக்கு மூலிகை மருந்து கொடுக்கப்பட்டது.

**கரிசல் குளத்தில் மூலிகை வைத்திய முகாம்**

ஆகஸ்டு மாதம் 12ம் தேதியன்று கரிசல்குளம் கிராமத்தில் திரு. குமாரின் செம்மறி ஆட்டு கிடையில் மூலிகை மருத்துவ முகாம் நடைபெற்றது. இம்முகாமில் அழகுமலை, சேவா, மதுரை, குமார், அரவிந்தன் மேலக்கரந்தை ஆகியோர் பங்கு பெற்றனர். இம்முகாமில் செம்மறி ஆடுகளுக்கு காணை மற்றும் புழு வைத்த புண்ணிற்கு மூலிகை மத்தன் தைலம் போடப்பட்டது. இம்முகாமில் சுமார் 120 ஆடுகளுக்கு மூலிகை குடற்புழு மருந்து, மூலிகை மத்தன் தைலம் மற்றும் சோற்றுக் கற்றாழை கொடுக்கப்பட்டது.

**தாபாதி கிராமத்தில் மூலிகை மருத்துவ முகாம்**

ஆகஸ்டு மாதம் 13ம் தேதி தாபாதி கிராமத்தில் திரு. ராஜா வெம்பூர் செம்மறி ஆட்டு கிடையில் நீலநாக்கு மற்றும் காணை நோய் தடுப்பு மருந்தாக

சேற்றுக்கற்றாழை மற்றும் மூலிகை குடற்புழு மருந்து கொடுக்கப்பட்டது. இதில் அழகுமலை, சேவா, மதுரை, திரு.ராஜா கிடைக்காரர் பங்கு பெற்றனர். முகாம் முடிந்த பின்னர் திரு. ராஜா கூறுகையில் செம்மறி ஆடு மேய்ச்சல் அதிகம் இல்லாததாலும் தீவனப் பற்றாக்குறை மற்றும் குடிதண்ணீர் வசதி இல்லாமல் இருப்பதைக் கூறினார்.

தொகுப்பு : அழகுமலை, சேவா

## மனிதா மனிதா மாமனிதா

மனிதா மனிதா மாமனிதா
மரங்களை மட்டும் அழிக்காதே
மனிதவளம் மேம்பட மரங்களுக்கு பங்குன்டு
முக்கனி தந்தது மரந்தானே அக்கனி உண்பதும் நாம் தானே
முருங்கைமரம், தென்னைமரம் காய்த்திருக்கு
முருங்கைமரம் பூத்திருக்கு
மதிய வெயில் பட்ட உடன் மரத்தின் நிழலை தேடுவோம்
நிழல் பக்கம் போன உடன் நிம்மதியை நாம் காண்போம்
பறவைகள் வந்து இளைப்பாறும் பழங்களை தின்று பசியாறும் (மனிதா)
புளியமரம் ரசமாகும், புங்கை மரம் நிழலாகும்
புன்னைமரம் பூத்திருக்கும் புதுவாழ்வு காத்திருக்கும்
தென்னைமரம் காய்த்திருக்கும் தேங்காயை கொடுத்து நிற்கும்
முருங்கை மரம் பூத்திருக்கும் முதுமையை போக்கி நிற்கும்
மூச்சுத்திணற வந்தாலே முந்தி ஓடி காத்திருக்கும் (மனிதா.....)
சந்தனமரம் கூட, சமத்துவத்தை கொடுத்திருக்கும்
சாதிசனம் பேதமெல்லாம் நம்மிடம் தானிருக்கும்
மர இலைகள் உதிர்வதனால் மண்ணுக்கு உரமாகும்
மண்வளம் பெற்றாலே மாநிலமே செழிப்பாகும் (மனிதா...)

சிறுக்குளம் போ.சின்னச்சாமி
விருதுநகர் மாவட்டம்

## சூரிய சக்தி (சோலார்) அடிபம்பு, சைக்கிள்

(.....5ம் பக்க தொடர்ச்சி )

மணிகண்டனின் முகவரி :
திரு. மணிகண்டன்
டி.வி.எஸ் கம்யூனிட்டி காலேஜ், குட்ஷெட் தெரு
மதுரை – 1, செல்: 9486394426

## கால்நடை மூலிகை வைத்திய பயிற்ச்சி முகாம்

கால்நடை மூலிகை வைத்திய பயிற்ச்சி முகாம் ஆகஸ்ட் மாதம் (2016) 29 – 30 நாட்களில் விழுப்புரம் மாவட்டம் நடுகுப்பம் கிராமத்தில் நடைபெற்றது. இந்த பயிற்சியை எஸ்.எல்.ஐ மற்றும் பிச்சாண்டிகுளம் பாரஸ்ட் நிறுவனங்கள் ஏற்பாடு செய்திருந்தன. இந்த பயிற்சி முகாமில் மதுரை, விருதுநகர், திருநெல்வேலி மாவட்டங்களிலிருந்து பதினான்கு மகளிர் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இவர்களுக்கு கால்நடைக்கு வரும் நோய்களைப் பற்றி சேவா நிறுவனம் செயல் இயக்குநர் விவேகானந்தன் எடுத்துரைத்தார். இதற்கு பின் மூலிகைப் பண்ணையில் மூலிகை செடிகளை அடையாளம் காட்டி அவைகளின் பயன்பாடுகளை திருமதி. பார்வதி விவரமாக எடுத்துரைத்தார்.

தாண்ரிக்காய் கொட்டை நீக்கிய தோலை மட்டும் சாப்பிட மலச்சிக்கல் அகலும், கடுக்காய் விதைகள் சாப்பிட கழிச்சல் குணமாகும். குட்டிவிளா, பூலாங்கிழங்கு சின்னித்தழை புழுக்கம்பட்டை இவைகளை அரைத்து



குழந்தைகளுக்கு சருமத்தில் பூசி வந்தால் சீர் அடிக்காது சரும நோய்கள் குணமாகும். இலுப்பை மரத்திலிருந்து செக்கின் அடிப்பகுதி செய்யப்படுகிறது. சோப்புக்காய் பொடியை தலையில் தேய்த்து வர முடி உதிர்வது தடுக்கப்படும். சோப்புக்காய் சித்திரை வைகாசி மாதங்களில் அறுவடைக்கு வரும். சோப்புக்காயுடன் உப்பு சேர்த்து சுடு தண்ணீரில் சேர்த்து பாதங்களில் கழுவி வந்தால் பாத வெடிப்பு போன்ற நோய்கள் தீரும். எள்ளுச் செடியை நீரில் அரைத்து

தலையில் தடவி குளிப்பது எண்ணெய் தேய்த்து குளிப்பதற்கு சமமாகும். பிரண்டையை விளக்கெண்ணையை சேர்த்து வதக்கி அரைத்து எலும்பு முறிவுள்ள இடத்தில் தேய்த்தால் எலும்பு முறிவு ஒன்று சேறும். கொளிஞ்சித்தலையை இலைகளை பறித்து வந்து தூளாக்கி ஈசல் புற்று அருகில் போட்டால் அதிக ஈசல் வெளிவரும்.

அடுத்த நாள் செல்வி மற்றும் பிச்சாண்டிகுளம் கள பணியாளர்கள் துணை கொண்டு மூலிகை மசாலா உருண்டை செயல் விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டு கால்நடைகளுக்கு கொடுக்கப்பட்டது. இத்துடன் மத்தன் தைலம் தயாரிப்பதும் செய்து காட்டப்பட்டது.

## வெம்பூர் ஆடு வளர்ப்பு கருத்தரங்கம்

19.8.2016 அன்று வெம்பூர் ஆடு வளர்ப்போர் கூட்டம் மேலக்கரந்தை கிராமத்தில் சமுதாய கூடத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் குண்டலகுத்தூர், நத்தத்துபட்டி, மாவில்பட்டி, குருவார்பட்டி, வெம்பூர், மேலக்கரந்தை, முத்துலாபுரம் கிராமங்களிலிருந்து வெம்பூர் ஆடு வளர்ப்போர் 35 நபர்கள் கலந்து கொண்டனர். இதில் திருநெல்வேலி கால்நடை மருத்துவ




கல்லூரி உதவி பேராசிரியர் டாக்டர். செல்வகுமார், வெம்பூர் கால்நடை மருத்துவர் டாக்டர். கார்த்திக், மேலக்கரந்தை கால்நடை மருத்துவர் டாக்டர். மெய்யப்பன் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் செம்மறி ஆடுகளுக்கு வரும் முக்கியமான நோய்களும், தடுக்கும் முறைகளும், பொலிகிடாக்களை 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை மாற்றுவது குறித்தும் மற்றும் பொதுவான பிரச்சனைகளும் விவாதிக்கப்பட்டன. இதன்படி கீழ்கண்ட பணிகளை முறைப்படி அரசு அலுவலர்களிடம் எடுத்து கூற முடிவு செய்யப்பட்டது.

மேலகரந்தை கன்மாயில் உள்புரம் குடி நீர் குழாயும் தண்ணீர் தொட்டியும் கட்டி தர வேண்டும்.

நத்தத்துபட்டியில் கலிங்கு மேட்டுபட்டி ஓரம் மேலமடக் கன்மாய் உண்டு. இந்த கன்மாயில் ஆடு தண்ணீர் குடிக்க வழியில்லாமல் கன்மாய் நிலம் சுமார் 50 விவசாயிகளினால் ஆங்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது. 18 வருடங்களுக்கு முன்பு கருவேல் மரம் வெட்டப்பட்டது. அதிலிருந்து இன்று வரை கன்மாயில் வெள்ளாமை செய்யப்படுகிறது.

இருக்கன்குடி நீர் தேக்கம் செல்ல 2 கிலோ மீட்டர் தூரம் போக வேண்டும். அங்கு இரவில் தங்குவதற்கும் ஆடுகளை அமர்த்துவதற்கும் வசதி செய்து தர வேண்டும்.

குருவார்பட்டி கிராமத்தில் ஆத்தங்கரை கன்மாய் உண்டு. கன்மாய்க்கு செல்லும் பாதை ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது.

மாவில்பட்டி கிராமத்தில் சேவா மூலம் போடப்பட்ட அடிபம்பு பழுதாகி விட்டது. இதனை சரி செய்து தர வேண்டும். விவசாயிகளுக்கு தேவையான தீவனபுல், தீவன சோளம் விதைகள் தர வேண்டும்.

நத்தத்துபட்டி கிராமத்தில் விவசாயிகளுக்கு சுத்த வெம்பூர் செம்மறி ஆட்டு பொலி கிடா வாங்கி தர வேண்டும்.

வெம்பூரில் ஊருக்கு மேற்கே தேசிய நெடுஞ்சாலையை கடக்க கீழ் பாலம் அமைத்து தர வேண்டும்.

இந்த கூட்டத்தில் ‘‘வெம்பூர் ஆடு’’ என்ற சிறு புத்தகம் (கையேடு) வெளியிடப்பட்டது. இந்த கையேட்டின் முதல் பிரதியை சொக்கலிங்கபுரம் கண்ணன் பண்ணை குருஜெகநாதன் பெற்று கொண்டார்.

### கூட்டத்திற்கு பின் விருதுநகர் மாவட்ட ஆட்சியரின் நடவடிக்கை

நாள் : 26.09.2016

பொருள் : ஆக்கிரமிப்பு – சாத்தூர் வட்டம் மற்றும் நகரம் – ஆக்கிரமிப்பினை அகற்றக்கோரி மனு அளித்துள்ளது– தொடர்பாக.

பார்வை: 1. அரசாணை எண். 540, வருவாய் (எல்டி6(2) துறை நாள் : 04.12.2014

2. சென்னை கூடுதல் தலைமைச்செயலர் / நில நிர்வாக ஆணையர் அவர்களின் நே.மு.கடித எண். டி2/22408/2014, நாள். 09.12.2014

3. விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை

ஆணை எண்.ஜி.2/42828/2014, நாள்: 19.12.2014
சாத்தூர் வட்டம் மற்றும் நகரம்,ஆக்கிரமிப்பினை அகற்றக்கோரி அளித்துள்ள மனு அசலாக இத்துடன் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. பார்வை – 1ல் குறிப்பிட்டுள்ள அரசாணை மற்றும் பார்வை – 3 ல் காணும் செயல்முறை ஆணையில் தெரிவித்துள்ளபடி மனுதாரரின் மனுவின் மீது நடவடிக்கைகள் மேற்கொள்ளும்படியும் நடவடிக்கை விபரத்தினை 60 தினங்களுக்குள் மனுதாரருக்கும் இவ்வலுவலகத்திற்கும் தெரிவிக்கும்படியும் சாத்தூர் வட்டாட்சியர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.
(ஓம்) கே.ராஜம்மா, மாவட்ட ஆட்சியருக்காக, விருதுநகர்

**தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் பதில்**

நாள் : 15.09.2016
பொருள்: ஆக்கிரமிப்பு– தூத்துக்குடி மாவட்டம் – விளாத்திகுளம்வட்டம்– குருவார்பட்டி கிராமம் – சின்னகண்மாய் மற்றும் பெரிய கண்மாய் மற்றும் கம்பத்துபட்டி – வேம்பார் கிராமம்– சோலங்க ஊரணி – ஆக்கிரமிப்புகள் அகற்ற வேண்டி.
பார்வை: திரு. பெ.விவேகானந்தன், விராட்டிபத்து என்பவர் மனு நாள்: 23.08.2016.
மேற்கண்ட பொருள் தொடர்பான பார்வையில் கண்ட அசல் மனு இத்துடன் தக்க மேல் நடவடிக்கைக்காக இணைத்து அனுப்பியுள்ளேன். புலங்களை தணிக்கை செய்து மனுவில் குறிப்பிட்டுள்ளவாறு ஆக்கிரமிப்புகள் ஏற்பட்டிருப்பின் உரிய விதிகளின்படி அகற்ற நடவடிக்கை எடுத்து அதன் விபரம் மனுதாரருக்கும் இவ்வலுவலகத்திற்கும் தெரிவிக்கும்படி விளாத்திகுளம் மற்றும் புதூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
ஓம்/த.அழகர்சாமி,மாவட்ட ஆட்சியருக்காக, தூத்துக்குடி


**ஜமன்லால் பஜாஜ் விருது 2017**

2017 ம் ஆண்டிற்கான விண்ணப்பங்கள் விண்ணப்பிக்க கடைசி தேதி 16.01.17. விண்ணப்பங்கள்கீழ்கண்ட இணையதளத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
**www.jamnalalbajajfoundation.org**
மேலும் விவரங்களுக்கு
Jamnalal Bajaj Foundation
Bajaj Bhavan, Jamnalal Bajaj Marg,
226 Nariman Point , Mumbai - 400021
Phone- 022-2202-3626
Email-info@jamnalalbajajfoundation.org


## சத்துணவு மாவு குடிசை தொழில்



எட்டு ஆண்டுகளுக்கு முன்னர் சத்துணவு மாவு தொழில் துவங்க முற்பட்டேன். அப்போது 5 கிலோ அளவில்
சத்துணவு மாவு தயாரித்து பக்கத்து வீடுகளில் விநியோகித்து வந்தேன். தற்சமயம் மாதம் 71/2 டன் அளவு உற்பத்தி உயர்ந்துள்ளது. குடிசைத்தொழில் 10 பெண்கள் தினமும் உழைத்து வருகின்றனர். தமிழ்நாட்டில் 40 கடைகளில் எங்களது “சுகாடயட்” மாவு விற்பனையாகி வருகிறது. சர்க்கரை, கொலஸ்ட்ரால் உள்ளவர்களுக்கு இதை பயன்படுத்துவதால் மருத்துவ செலவு குறைந்து வருகிறது எனக் கூறுகின்றனர். தற்சமயம் மூலிகைப் பொருட்களையும் சத்துணவு மாவில் கலந்து விநியோகித்து வருகிறோம்.
திருமதி. ராஜேஸ்வரி ரவிக்குமார்
2/314, கார்குடி மெயின் ரோடு, திருவையாறு – 613204
செல் : 9443163206

## கோயிலிடத்தில் தைலமரமா?

திருநெல்வேலி நெல்லையப்பர் கோவிலுக்கு சொந்தமான சுமார் 1100 ஏக்கர் இடம் நாங்குநேரி வட்டாரம் பருத்திபாடு கிராமத்தில் உள்ளது. இந்த இடத்தில் சுமார் 20 கிராமங்களைச் சேர்ந்தோர் தங்கள் கால்நடைகளை மேய்த்து வருகின்றனர். இது இவர்களுடைய வாழ்வாதாரத்திற்கு பயனளிக்கிறது. இந்த இடத்தை இந்து அறநிலைத்துறை தமிழ்நாடு பேப்பர் கம்பெனிக்கு மரங்கள் நடுவதற்கு கொடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. தைலமரம் இங்கே நடப்பட உள்ளது. கோயிலுக்கு சொந்தமான இடத்தில் பாரம்பரிய மேய்ச்சல் மூலம் மக்களுக்கு பயன்படும் தீவன மரங்கள் நட்டு இடத்தை மேன்மைப்படுத்தலாம். இதை விட்டு டி.என்.பி.எல் நிறுவனத்திற்குக் கொடுப்பது எப்படி நியாயமாகும்.
மதிவாணன்
அத்ரி தொண்டு நிறுவனம்
திருநெல்வேலி மாவட்டம்